ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரூ. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4848

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 24—2—1946 | இதழ் 45

கற்பனைக் கதை:

## "சொல்வதை, எழுதேண்டா!"

சௌமியன்.

'டே! மண்டு! சாட்டாச் சேன்னே? சரி, கொஞ்சம் உட்கார். நேக்குக்கொஞ்சம் கையை வலிக்கறது. நான் சொல்லிண்டுவர்றேன்.சமத்தாஎழுது,தெரியறதோ'

"ஆகட்டும் மாமா! லெட்டரோ?"

"எதா இருந்தா என்னடா நோக்கு! சொல்வதை எழுதேண்டா!"

"ஆஹா! இதோ லெடர்பேப்பர் எடுத்துண்டு வர்றேன்"

"பார்க்கணும் உன் சாமர்த்தியத்தை. எந்த லெடர்பேப்பர்எடுத்துண்டு வர்றே"

"ஏன், 'ஜர்னலிஸ்டு' லெடர் பேப்பர்தான்"

"மண்டுன்னு சரியா இருக்கு. இப்ப திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாருக்கு லெடர்எழுதணும். அதற்கு இந்த லெடர் பேப்பர் ஆகாது. போய்,ராகவாச்சாரியார், பிரிசிடெண்ட், ராம பக்தஜன சபான்னு இருக்கே, அந்த லெடர் பேப்பர் எடுத்துண்டு வாடா"

"அனுமார் பிளாக் போட்டிருக்கே!"

"அதுதாண்டா மண்டு! அது தான்."

மாமனும் மருமானும் அப்படித்தான் வேடிக்கையாகப் பேசிக்கொள்வது வழக்கம். எங்கேயும் என்று சொல்லவில்லை. ராகவாச்சாரியார் 'ஆத்திலே' அப்படித்தான் வழக்கம்.

'ஏண்டி! இன்னக்கி நம்ம ருக்கு பலேபேஷா இருக்காளே. ஆத்துக்காரன் பார்த்தானானா, மயக்கமடிச்சிவிழுந்துடுவன்' என்று ராகவாச்சாரியார், தன் குமாரி ருக்குவைப் பற்றிச் சகதர்மிணி சாந்தாவிடம் பேசுவார். ருக்குவையே கூடக்கேட்பார் சிலசமயம், "என்னடி அது,தாடையைத்தடவிண்டு நிற்கறே, சுந்தரம், கடிச்சுட்டானா!" என்று. சுந்தரம், ருக்குவின் புருஷன், அவன், "மாமனார் ஆடறவிளையாட்டுப்போலநேக்குத் தெரியாதே" என்று மாமனாரிடம் வேடிக்கையாகத்தான் பேசுவான்.

"மண்டு" அதாவது மற்றோர் மருமான், உறவின் முறை, பெண் கொடுத்து ஊர்ஜிதம் செய்யவில்லை, பெண் வேறேஇல்லாததால். வேலை வாங்கித்தருவதாக,வரவழைத்திருந்தார் வாதனை. அவனுக்குத்தான் அந்த 'மண்டு' பட்டம்.

மண்டு, லெடர்பேப்பருடன்வந்து உட்கார்ந்தான், எழுதுவதற்கு. ஐயர், துவக்கினார்.

"ஸ்ரீமான் திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாரவர்களுக்கு," என்று கூறினார், மண்டு மளமளவென்று எழுதி, "களுக்கு"என்றுகூறினான், "டேபுஸ்ரீராமஜெயம்போட்டயா?" என்று கேட்டார், ராகவாச்சாரியார். "இல்லையே! சொல்லலையே!" என்றான், மண்டு. போடா,இதைக்கூடச் சொல்வாளாக்கும்" என்றார்,அதையும்எழுதிவிட்டு,மேலால் கூறச்சொன்னான், "முதலியாரவர்களுக்குச், சர்வமங்களானி இஷ்ட சித்திரஸ்து" என்று கூறினார் ராகவாச்சாரியார். மண்டு, எழுதிக்கொண்டிருக்கையில்ராகவாச்சாரி, "அவன் இஷ்டம்என்னதெரியுமோ, ஊர்த்தாலியை அறுக்கணும்.திவான் பகதூர்முதலியார்என்றால்தேசமே நடுங்கவேணும். கவர்னர் பங்களாவை விலைக்கு வாங்கணும், இப்படி எல்லாமிருக்கும்" என்று வர்ணித்தார், எழுதுவதை நிறுத்திவிட்டு, மண்டு "ஏம் மாமா! அவ்வளவு பேராசைக்காரனா! அப்படிப்பட்டவனுக்கு சர்வாபிஷ்ட சித்திரஸ்துசொல்றேளே!"என்று,கேட்டான். "சொன்னதை நீ எழுதேண்டா.நான் சொன்னா அவன் ஆசை எல்லாம் சித்தி ஆகிவிடறதோ. அவனுக்கு அதனாலே இலாபம் இல்லே, அந்த வார்த்தையைச் சொல்றதாலே நமக்கு கஷ்டம் என்ன? சும்மா, எழுதி அனுப்பினா, பய, பல்லிளிப்பன்.வேறேஎன்ன? எழுது!" என்றார், எழுதினான். ராகவாச்சாரி மேலும் சொல்ல ஆரம்பித்தார், "நான் எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் பிறத்தியாரிடம் சொல்கிற வழக்கமேகிடையாது." இதைச்சொன்னதும்,மண்டு,எழுதவில்லை, சிரித்தான்.

"மாமா! என்னபோடு போடறீர்.வாசல்கூட்டுகிறவளிடமிருந்து வருகிறவா போகிறவா ஒவ்வொருவரோடும், கஷ்டசமாசாரம் சொல்லத்தானே உமக்குப் பொழுது இருக்கு. பிறத்தியாரிடம் சொல்லறதே கிடையாதுன்னு எழுதச் சொல்றீரே" என்று மாபாவைக் கேட்டான். மண்டுதானே அவன்! மாமாவின் பிரத்யேக முறைகள், மாமிகாதிலே வைர ஓலையாகவும், ருக்கு கழுத்தில்லாங் செயினாகவும், பெரியமருமான்கையில் ரிஸ்ட்வாச்சாகவும், விளைந்ததை அவன் அறிவானா? மாமா, எப்படி ஒவ்வொரு விஷயத்தையும் அவனுக்கு விளக்க முடியும்! முறைத்துப் பார்த்தார், அவன் எழுதினான்.

"என்மகன், பஞ்சு, பி.எ. வகுப்பிலே படிக்கிறான் என்பது தங்களுக்குத் தெரியும்" என்றார், பேசாமல்எழுதினான் மண்டு. "என்டா! இதற்கு ஒன்றும் கேட்கலையே? எப்படிப் பஞ்சு'என்று கூறலாம், அவன்தான், ஆர்.பி. நாதன்என்று கைஎழுத்துப்போடுகிறானே,எனக் கேட்பதுதானே" என்று கேலி செய்தார், ராகவாச்சாரி. பஞ்சநாதன், மகன் பெயர். இவர் அதைத்தான் பஞ்சுஎன்றுகுறிப்பிட்டார், அன்புச் சுருக்கமாக. நாகரிகச்சுருக்கமாக, பையன், ஆர். பி. நாதன் என்றுதான் எழுதுவது வழக்கம். விஷயம் அவ்வளவு பிரமாதமில்லை என்று, மண்டு தள்ளிவிட்டான். "மேலே சொல்லுங்க மாமா!" என்று கூறினான். "பஞ்சுவுக்குக் காலேஜ் செலவுக்குத் தருவதற்கு, நான்படுகிற சிரமம்இருக்கே,அது சாட்சாத் ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்குத்தான்தெரியும்" என்றார் ராகவாச்சாரி.'உம்'போட்டான்மண்டு, எழுதிக்கொண்டே. "அதிலும்இந்த மாதம், ராமபக்தசபா வருஷாப்திக்காகச்செலவு ஏராளமாகப்பிடிச்சுவிட்டது" என்றார்; எழுதினான்அந்த வருஷ விழாசாக்கிலே வாங்கின திராட்சையும் பாதாமும்,முந்திரியும் பருப்பும், வேட்டியும் வெள்ளிவட்டிலும், வேறு பலப்பல சாமான்களும், வீட்டிலே எங்கெங்கு உள்ளனஎன்பது மண்டுவுக்குத் தெரியும்! தெரிந்து என்ன செய்வது; ராகவாச்சாரி சொல்கிறபடி எழுதத்தானே வேண்டும்! 'ஆகையாலே, என்மீது ரொம்பத்தயவு வைத்து, பையனிடம் ஒருஐம்பதுரூபாய் தரவேணும்" என்றார், "ஐம்பதா!" என்றுஒருமுறைக்கேட்டுக்கொண்டான் மண்டு. ஏனெனில் அவனுக்குச்சந்தேகம் பஞ்சநாதனுக்குப் பணம் தேவையா என்பதிலேயே. "ரோடியோ" நாடகத்திலே நடித்ததற்காக, பஞ்சநாதனுக்குக்கிடைத்த இருபது ரூபாயைக்கூடஅவன் அப்பாவுக்கு மணியார்டர் செய்திருந்தான், அந்தச் சந்தோஷத்திலே, பகவானுக்கு அக்ராவடசல் கூடச் செய்தார்கள்; அப்படி இருக்க ஐம்பதுரூபாய் எதற்காகப் பஞ்சுக்கு, என்று சந்தேகம். 'ஆமாம்,ஐம்பதுதான்,முட்டாளே, அவ்வளவுபெரியஆசாமியிடம் ஐந்து பத்துத்தான்கேழ்ப்பாளோ? நாமென்ன, அவன் ஆத்திலே வண்டி ஓட்டறவாளா!" என்று விளக்கம் உரைத்தார் ராகவாச்சாரி. "இந்த ஐம்பது இந்தச்சமயம் எனக்குஆயிரத்துக்குச்சமானம்" என்று கூறினார் ராகவாச்சாரி, மண்டுவுக்கு இதுவும் புரியவில்லை. ராகவாச்சாரியாரின் அண்ணன் உள்ளூர்ப்புரோகிதர். அவர், சக்ஷிட்டில் [illegible] எவ்வளவு [illegible] கொடுத்தாலும், கொடுத்தது கொஞ்சமாகஇருந்தாலும் இதைவிட அதிகமாக [illegible] வேண்டும் என்று கூறச்செய்பவர். ராகவாச்சாரியார், புதிய முறைப் புரோகிதர்தானே! "தங்களுடைய தர்ம சிந்தனையையும்,தயாளகுணத்தையும்................" என்று சொன்னார் ராகவாச்சாரி,எழுதிவிட்டான் மண்டு, வாசகத்தை முடிக்காமல் யோசிக்கலானார் ராகவாச்சாரி. "என் மாமா,தயாளகுணத்தையும், எழுதிவிட்டேன்" என்றான் மண்டு. "இருடா! [illegible] எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது, அதிலும் அந்தப்பயலுக்கு உச்சிகுளிரும்; தர்ம சிந்தனை, தயாளகுணம்,போதாது, இன்னும் ஏதாவது சேர்க்கணும்; என்னபோடலாம், சொல்லேன் நீதான்" என்று மண்டுவையே கேட்டார். "பிராமண பக்தின்னு போடுமே மாமா!"என்று யோசனை சொன்னான் மண்டு. "பித்துக்குளி! அந்த வார்த்தையைப் போடவேபடாது. இப்போ பிராமணபக்தின்னாலே, கேலி பேசறவா ஜாஸ்தியாம் அதிகமாயிட்டாளாம், இவன் கூடத்தான் ஏதோ சமயத்துக்குச் சமயாசமயத்திலே ஒத்தாசை செய்யறானேதவிர, மத்தவாளிடம் பேசறபோது, "இந்தப் பார்ப்பாரப்பயலுக" என்றுதான் நம்மசமூகத்தையே [illegible] வழக்கம். ஒருதடவை, அவன் [illegible] பார்டா,என்ன [illegible]" என்று திவான்பகதூரின் [illegible] விளக்கினார் ராகவாச்சாரி. "[illegible] எதிரிலேயா! சும்மாவா இருந்தீர் மாமா!" என்றுகேட்டான்மண்டு. "சும்மா [illegible] அவனிடம் சண்டைக்கு நிற்பானா! காரியம் பெரிசா? வீரியம்பெரிசா? நான் பேசாமே கேட்டுண்டுதான் இருந்தேன். அவனுக்கே, பிறகு, நான் இருக்கிறேனே ஒருசமயம்கோபிப்பனோன்னு சந்தேகம். உடனே, என்னைப்பார்த்தான், [illegible] "என் 'சாமி நம்ம சமூகத்தைக் கொறை பேசறானே [illegible] கோபமா?" என்று கேட்டான், "அதெல்லாம் இல்லே, முதலியாரவாள்! லோகாச்சாரப்படிதானே சொன்னேள்" என்று ஒருபோடு போட்டேன். பயலுக்குப் பிரமாதமான திருப்தி. "உங்களிஷயம் தனி, சாமி. உங்களைப்போலவே [illegible] மும் மனமும் உள்ள பிராமண[illegible] குறை சொல்லலே, மத்தவாளைத்தான் திட்டினேன்" என்று சமாதானம்பேசினான், வழக்கமாகத் தருவதைவிட அன்று ஒரு பத்து ரூபாய் அதிகமாகத் தந்தான்,அது வது நம்ம [illegible]

([illegible] பக்கம் பார்க்க)

"ராம பஜனையால் சுயராஜ்யம் வராது" [illegible]

# “விதைக்காது விளையும் கழனி”

—(பரதன்)—

★

விதைக்காது விளையும் கழனி எப்படி இருக்கமுடியும்? ஏன் முடியாது? உழைக்காது வாழும்மனிதர்கள்வாழும்போது, விதைக்காது விளையும் கழனி ஏன் இருக்காது? உழைக்காது வாழும் மனிதர்கள் இருப்பது மட்டுமல்ல, ஊரையே ஆட்டிவைக்கும், அரசனையே ஆட்டிப்படைக்கும் மனிதர்களும் இருந்திருக்கிறார்கள்—இருக்கிறார்கள். அரசன் உழைப்பதில்லையேதவிர, ஊர்க்கோபத்துக்கும், வேறு வேந்தரின் படையெடுப்புக்கும் அஞ்சி வாழவேண்டும். மன்னன் ஆளப்பிறந்தவன் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஆழப்பதிந்திருக்கும் வரையிலேதான், மன்னன் மணிமுடிதரித்துவாழ முடியும், கோபமோ குமுறலோகொப்பளித்தால்,கோல் உடையும். ஒரு அரசுபோனால் மற்றோர் அரசு கிடைக்கும், என்ற நம்பிக்கையோடும்அவன் இருக்கமுடியாது.முடிகவிழ்ந்தால்,பிறகு மீண்டும்சிரம்ஏறும்என்றும்உறுதியாகக் கூற முடியாது. ஆனால் அரசர்களுக்கு இருக்கும் இந்த ஆபத்துக்கள் கூட்டத்தை அண்டமுடியாதபடியான அரண்அமைத்துக்கொண்டு, ஆண்டிக்கோலத்திலேஇருப்பினும் அரசபோகத்தையும் அநாயாசமாகப்பெறக்கூடியநிலைபெற்று,நெடுங்காலமாகவே அந்தநிலை குலையாமல் பார்த்துக்கொண்டு வாழும் கூட்டம் ஒன்று இருக்கிறது.

★

ஆச்சரியமான பல உண்மைகள் உலகில் உண்டு. பெரியதோர்யானை, பித்துபிடித்ததுபோல் ஓடும், எதிர்ப்பட்டோரையும் தாக்கும்; அதன் கலக்கத்துக்கும் கோபத்துக்கும் காரணம் தெரியாமல், மக்கள் திகைப்பர். கடைசியில் பார்க்கப்போனால், அதன் காதிலே புகுந்துகொண்ட சிறுவண்டுசெய்த சேட்டையால், குன்றென உடல் படைத்த கரி, அங்ஙனம் ஆடி அலைந்து, ஆபத்தையும் உண்டாக்கிற்று என்பது தெரியவரும். எவ்வளவு சின்னஞ் சிறுவண்டு, எத்தனைபெரிய உடலை ஆட்டிவிட்டதுஎன்றுபிறகே தெரியவரும். மிருகங்களிலே மட்டுமென்ன, மனிதர்களிலேயும் இந்த விசித்திரம் உண்டு. வீராதி வீரனாயிற்றே இவன், எப்படி ஒரு வீணனிடம் அடங்கிக்கிடக்கிறான்,என்று ஆச்சரியப்படுவோம் சிலசம்பவங்களைக்காணும்போது,ஆனால்கொஞ்சம் ஆராய ஆரம்பித்தால் தெரிந்துகொள்வோம், ஒரு துடியிடைக்கு அந்த வீணன் தூதுபோகிறவன் என்ற சூக்ஷமத்தை. நமக்கு, அவள் ஒரு மாது அவன் ஒரு வீணன், ஆனால் அந்த வீராதி வீரனுக்கோ, அவள், இன்பம், அந்த வீணன் இன்பபுரிக்கு அவனை அழைத்துச் செல்பவன். எனவே இன்பபுரியில் குடிஏறிய வீரன், யாரால் அந்த இன்பபுரி வாசம் தனக்குக்கிடைத்ததோ, அவனை வீணன் என்று எப்படிக் கருதுவான்! அவன், மற்றவர்களுக்கெல்லாம் வீணன்தான்! அவனுக்கு அப்படி அல்லவே! விலைமதிக்கொணாத இன்பத்தையன்றோ அவன் அந்த வீரன் பெறும்படி செய்தான். இந்த ‘மர்மம்’ சுலபத்திலே வெளிவரக்கூடியதல்ல. சொன்னாலும் பலர்நம்பமாட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட, ஏதாவது ஒருமர்மம் இருந்தாலொழிய, வீராதிவீரர் பலர், மிகச் சாமான்யர்களிடம், அடங்கி நடப்பதன், இரகசியம் தெரிந்துகொள்ள முடியாது போய்விடும்.

★

வரலாற்றிலே,வேந்தர்பலர்,சேடிகளிடமோ சேனாதிபதிகளிடமோ, சிரித்த முகத்திடமோ கூரியவாளிடமோ ஆசையாலோ பயத்தாலோ, அடங்கிவிட்டதற்கு ஆதாரம்இருக்கிறது. இவைகூட ஆச்சரியமில்லை. கூரியவாளோ, குளிர்மதிப்பார்வையோகூட இல்லாமல், நிமிர்ந்தபார்வையுடன் உள்ள ஒருசிறுகூட்டத்திடம் மன்னாதி மன்னர்கள்மண்டியிட்டு இருக்கிறார்கள். மக்களின் சீற்றத்தைப்பற்றிக்கூட அவர்கள் அவ்வளவு அதிகமாகக் கவலைப்படமாட்டார்கள், அந்தச் சிறுகூட்டத்தின் சீற்றத்திடம் அவர்கள் மிகமிக அஞ்சுவார்கள், ஏனெனில், இந்த மக்களின் சீற்றத்தைக் கிளப்பவும் நிறுத்தவும், வேறு மன்னர்களின் விரோதத்தைஏவவும், சிநேகத்தை வாங்கித்தரவும், அந்தக் கூட்டத்தினால் முடியும். ஒரு புலிக்கு இருக்கும் வலுவை, அளவிட்டுக்கொண்டு அதற்குத் தகுந்தபடி, ஆயுதபலத்தைத் தேடிக்கொள்ளலாம். ஆனால், பலபுலிகளை, ஏககாலத்திலே, ஏவிவிடக்கூடிய காட்டரசனின் வலுவு எந்த அளவு என்று எப்படிக்கணக்கிட முடியும். அதிலும் சுகபோகத்தையும், சொந்த நலனையும் பாதுகாத்துக்கொள்வதிலே அக்கறைகொண்டுவிட்டால், அந்தச் சுகபோகத்தின் சுவையிலே இலயித்துவிட்டால், அதனை இழக்கத்துளியும் மனம் வராத நிலையிலே, அந்தச்சுகபோகத்தை அழித்துவிடுவதற்கான சக்தியைப்பெற்றவரிடம், அடிமையாகித்தானே தீரவேண்டும். இரும்புப்பெட்டியிலே உள்ள எண்பது இலட்சத்திலே ஆசை இருக்கும் வரையில், இடுப்பிலே தொங்கும் பெட்டிச்சாவியை, பெற்ற மகனைவிட அதிகப்பிரியமாகவும்ஜாக்ரதையாகவும் கவனித்துக்கொள்வது சகஜந்தானே!

★

“அரசே! அவந்திநாட்டு மன்னன், அழகில் மன்மதன்—அறிவில் பிரகஸ்பதி—செல்வத்தில் குபேரன்” என்றுஎடுத்துச்சொல்லவும், “அவந்திநாட்டுக்குமன்னனாகஉள்ளவன் அழிவின் சின்னம், அசுரபலம்அவனுக்கு, அக்ரமமேஅவனுக்கு அமிர்தம், அபலைகளை அழிப்பதே அவனுக்கு ஆனந்தம்!” என்று கூறவும் முடியும்; எவ்விதம் கூறினாலும் கேட்கவும், நம்பவும்,நம்பிக்கையின் பலனாக அவந்தி நாட்டுக்காவலனை அழிப்பது அறச் செயலாகும் என்று துணியவும், வங்க, கலிங்க, காம்போஜம் முதலியநாட்டு மன்னர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றால், இவ்வளவு மன்னர்களை ஏவும் நாவன்மை படைத்தவனை அவந்தி நாட்டவன், எப்படி அலட்சியமாகக் கருதமுடியும். அதிலும், இந்தச் செல்வாக்குப் படைத்தவன், தன்னைப்போல ஒரு மன்னன் என்றால், பொறாமையால் தூண்டப்பட்டு இங்ஙனம் தூற்றுகிறான், பேராசையால்பிதற்றுகிறான்என்று கருதலாம், சொல்பவனோ சொர்ணசிம்மாசனத்தின்மீது இல்லை,கமண்டலமெடுத்துக்கொண்டு காடுசுற்றும் நிஷ்காமகர்மிக் கோலத்திலே காணப்படுகிறான்! சாந்தம் குடிகொண்டமனம்! தேஜஸ் தவழும் முகம்! தவத்தால் இளைத்த தேகம்! நீண்டஜடை! பற்று அற்ற நிலையைக்காட்டும் பார்வை! இவ்விதமான கோலத்திலே உள்ளவன், கூறும் போது, எப்படி அவனைப் பொறாமைக்காரன் என்றோ, பேராசைப் பித்தன் என்றோ கூறமுடியும்.? இந்த விதமான சிக்கலான நிலைமையிலேதான், பண்டையநாட்களிலே, நமது மன்னாதி மன்னர்கள், மாவீரர்களைக்கொண்டபடைகளின் தலைவர்கள், “சிறுகூட்டத்திடம்” அடிமைப்பட்டனர்; அந்தப்பரம்பரை அடிமைத்தனம் இன்றும் போகவில்லை! முடியும்நம்மவர் சிரத்தினின்றும் போய் விட்டது, சிறு கூட்டத்தின் ஜடையும் போய் விட்டது, ஆனால், நம்மவர், அந்தச் சிறு கூட்டத்திடம் இன்றும் சிக்கிச் சீரழிந்தே வருகின்றனர்—தப்பும் மார்க்கம்தெரியாமலும் திகைக்கின்றனர்.


★

ஏசு நாதருக்கு அமோகமான செல்வாக்கு ஏற்பட்டது. அவருடைய வார்த்தை வேதமாகி விட்டது. ஐரோப்பா வெங்கும் ஏசுவின் விசுவாசிகள் அதிகரித்தனர். அவருடைய புகழ் எங்கும் பரிமளமாயிற்று. ரோமாபுரி சாம்ராஜ்யாதிபதியிடம், தங்கக் கோபுரங்கள் அமைக்கப் பட்ட மாளிகைகள், தோல்வி யறியாத துருப்புகள், தொகைதொகை யாகத் துதிபாடகர்கள்! பவனி வந்தான், பராக்குக் காரர் உடன்வர! மக்கள் கண்டனர், களித்தனர் ஆனால்மறந்தனர்; ஏசுவைப்புகழமறக்கவில்லை; கோலாகலமாகக் கொலு வீற்றிருந்தான், ‘பிரதானியர்கள் விருதுபாடினர், ஆனால் நாட்டின் நாலு பாகங்களிலுமிருந்து வந்த ஒற்றர்கள் எங்கும் ஏசுவின் செல்வாக்கு ஓங்குவதைக்கூறினர். கொலுமண்டபத்திலே கிலி குடிபுகுந்தது. ஏசுவின் சீடர்களிலே ஜூடாஸ் ஒருவன். மற்றவர்களுக்கு, ஏசுவின் மொழி பரவுவது கண்டு மகிழ்ச்சி, புதிய மார்க்கம் நிலைக்கிறது, சன்மார்க்கம்மேலோங்குகிறதேஎன்பதால்! தாங்கள் போற்றும் இலட்சியம் நாடெங்கும் பரவுவதுகண்டு,பேரானந்தம். ஜூடாசும் ஆனந்தப்பட்டான், ஆனால் வேறு காரணத்துக்காக. மற்றவர்களுக்கு, ‘இஷ்டபூர்த்தி’ ஆயிற்றே என்ற திருப்தி! ஜூடாசுக்கு,மகிழ்ச்சிதான், ஆனால் அடங்காத பசி—இனிமேல் தான் தன்னுடைய ஆசைஈடேற வேண்டும் என்ற ஆவல். அவனும், மற்றச் சீடர்கள் போலவே, இரவுபகலாக ஏசுவுக்குத் தொண்டு செய்தான்—மற்றவர்கள், சன்மார்க்கம் தழைக்கவேண்டும்என்பதற்காகஉழைத்தனர்—ஜூடாஸ், தன் குருதேவனின் புகழ் ஓங்கி, செல்வாக்கு வளரவேண்டும், பிறகு, அதனை ஆதாரமாகக்கொண்டு, ஐரோப்பாவிலே, பெரியதோர் அரசு அமைக்கவேண்டும், என்ற நோக்கத்தோடு வேலைசெய்தான். ஏசுவின் சொல் கேட்டு இலட்சக்கணக்கான மக்கள் எதையும் செய்வர் என்ற நிலை பிறந்ததும், ஜூடாஸ், ரோம் சாம்ராஜ்யத்தைவிட ரம்மியமானதோர் ராஜ்யத்தை அமைத்துவிடவேண்டும், ஏசுவுக்கு முடி சூட்டவேண்டும் என்றான். அலெக்சாண்டர் படைபலத்தால் அரசு அமைத்தான், அரசர்கள் பலப்பலர் செய்துள்ளனர் அதுபோல, குருதேவர் ஏசு, களம்புகவேண்டியதுமில்லை, ஒருவார்த்தை கூறினால் போதும், ஐரோப்பாவின்ஏகச்சக்ராதிபதியாகிவிடலாம். அவ்வளவு அபாரமான செல்வாக்கு அவருக்குஉண்டு என்பதைஜூடாஸ் அறிவான். அவன்எண்ணத்தையும் அவர் அறிவார். அறிந்தபோது சொன்னார், “என்ராஜ்யம் இந்த லோகத்திலே அல்ல” என்று. பிறகு ஜூடாஸ், ஏசுவைக்காட்டிக் கொடுத்தான். ஏசு, அரசு அமைக்க விரும்பவில்லை, காரணம் அவருடையநோக்கம், அரசு அமைப்பதைவிட, சிலாக்கியமானது, தூய்மையானது. அவர்நிரந்தரஅரசுஅமைத்துவிட்டார்,பலஅரசுகள் அவருடைய நிரந்தர அரசின் ஆணைக்குத்தாமாக அடங்கி நடக்க முன்வந்தன பிற்காலத்தில். ஜூடாஸ்நினைப்பிலே, இங்கு பலஜடாதாரிகள் உலவினர். அவர்கள் தத்தமது குருமாருக்குள்ள அமோகமான செல்வாக்கைக்கண்டு, ஏன் நமது குருதேவர் கொற்றவனாகக் கூடாது, ஏன் கோலாகலவாழ்வில் இருக்கலாகாது, அரசுகள் கண்டு அஞ்சும் ஆற்றலைப்படைத்தும், ஏன்தானோ அரசு அமைக்காது இருக்கிறார், என்று எண்ணி ஆத்திரப்பட்டதுண்டு. அந்தக்குருமார்கள், ஏசு

(7-ம் பக்கம் பார்க்க)

தந்தி:- “புறாமார்க்” திருச்சி.



உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

“இந்து ஆட்சிக்கு முடிவு கட்டவேண்டும்” அம்பேத்கார்.

# ★ சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ★

—:(o):—

சிந்தனைச் சிற்பி தோழர் மா. சிங்காரவேலர் இறந்துவிட்டார்; இலட்சியமே மூச்சாகக் கொண்டிருந்த வீரர் மறைந்துவிட்டார். இந்திய உபகண்டத்தின் முதல் பொதுஉடைமைவாதி காலமானார், மூன்றாவது சர்வதேச அபேதவாத அங்கத்தினர் மூவர், இந்தியாவில், அவர்களில் ஒருவர் இவர். அப்படி ஒருவர் இருந்தாரா, என்று கேட்கும், "கதர் ஜிப்பாக்களும்," "காரல்மார்க்ஸ் படிப்போரும்" ஏராளம். சோவியத்திலே பொது உடைமை ஆட்சி ஸ்திரமாவதற்கு முன்னாலேயே, இங்கு சென்னையிலே, கடலோரத்தில், மயிலையில் ஒருபுரட்சி வீரர் உலவிக்கொண்டிருந்தார். உலகிலே காணப்படும் கொடுமைகளைக்கண்டு, மனதிலே கோபம் அலை அலையாகக்கிளம்ப, அதனால் தூண்டப்பட்டு, யாரும் அதுவரையில் கேட்டறியாதகொள்கையை, பொதுஉடைமைத் தத்துவத்தைப்புரட்சிக்கனலுடன்கலந்து அளித்துவந்தவரே, தோழர் மா. சிங்காரவேலர் என்பதை, அவர்கள் அறியார்கள். தேசியத் தொழிலாளர் இயக்கங்களிலே அவர் பிரபலராக இருந்த சில பலவான்களிலேகூட, அவருக்கு உரிய ஸ்தானம் அவருக்கு அளிக்கப்படவில்லை, அவருடைய அறிவும் ஆற்றலும் அளவிடப்படவில்லை, வேட்டுக்கிளிகளும், பச்சோந்திகளும் புகழப்பட்ட நேரத்தில், புரட்சிப்புலியை மக்கள் மறந்தனர்—மறக்கும்படிச் செய்யப்பட்டனர். அவருடைய திறமை அறிவு, ஆற்றல், தியாகபுத்தி ஆகியவைகளை அளவாகக்கொண்டு, மதிப்பிடவேண்டுமானால், தோழர் மா. சிங்காரவேலருக்கு, லெனின், டிராட்ஸ்கி, சக்லத்வாலா, போன்றவர்களின் வரிசையிலே இடந்தரவேண்டும். ஆனால் கந்தபுராணம் காந்தி புராணம் படிக்கும் இருவகையினரையும் போற்றிப் புகழ்ந்த மக்கள், இந்த ஒப்பற்ற புரட்சிவீரனை, சாமான்யமாகக் கருதினர். நாளாவட்டத்திலே, சில இலட்சிய வாதிகளுக்குத்தவிர மற்றவர்களுக்கு அவருடைய பெயரும் மறந்துவிட்டது என்று கூறிவிடலாம். தோழர் மா. சிங்காரவேலரே, ஏகாதிபத்யத்தால் தாக்கப்பட்ட முதல்வீரர்—ஆனால் முப்புரி இல்லாத காரணத்தால் மங்கினார். அவருடைய பெருமைப்பாக்கள், படத்திறப்பு விழாக்கள், இல்லை! இராது!! அவர், மா. சிங்காரவேலுச்செட்டியார், பரதவர் குலம் (மீன்பிடிப்போர்,) நெய்தல் நிலநாயகன். சிங்காரவேல் சர்மாவாக இருந்திருந்தால், அவருடைய சிலையை மாஸ்கோவிலே நிறுவ வேண்டும் என்று மயிலைகூறும்.

மா. சிங்காரவேலர்; மறைந்தார் என்றபோதிலும், எதிர்பாராத திடுக்கிடக்கூடியவிதத்திலே நேரிட்ட மரணமல்ல. மரணத்தின்போது அவர் தம்முடைய உழைப்பு வீண் போயிற்றோ என்ற சந்தேகம் கொண்டு சஞ்சலமடைந்திருக்கவும்மாட்டார். ஏனெனில் 11-2-46ல் அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 84. அவருடைய இரண்டு அடிப்படை இலட்சியங்களாகிய சுயமரியாதை, சமதர்மம் என்பவை, ஓங்கி வளர்ந்திருப்பதைக்கண்டபிறகே அவரின் கண்கள் மூடின. சுயமரியாதையும் சமதர்மமும் வேறுவேறு கட்சிகளாக இருப்பானேன், அது முறையல்லவே, படைபலமேசிதறுமோஎன்ற கவலைமட்டும் அவருக்கு இருந்தது என்று கூறலாம். அதுவன்றி, அவருடைய பெயர் மங்கியதுபற்றி நாம்மனம் வருந்துகிறோமேயன்றி அவர் அதுபற்றி எண்ணியிருப்பார் என்றோ ஏங்கி இருப்பார் என்றோ எண்ணவில்லை. அந்த அஞ்சாநெஞ்சனுக்கு 'பூர்ஷ்வா' உலகில் மதிப்பு கிடைக்காது; கிடைக்கவில்லை—கிடைக்காததே அவருடைய மாத்துக்குறையவே இல்லை என்பதற்குச் சிறந்த அடையாளமுங்கூட.

இந்தியஉபகண்டம், ஏகாதிபத்ய இரும்புப் பிடியிலே சிக்கியது கண்டு, எழுச்சி பெற்று எதிர்த்த முன்னணி வீரர்களில், மா. சிங்காரவேலர், முதல் வீரர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரிடையாகக்கிளம்பிய சிப்பாய்க் கலகம் 1857ல் நடந்தது. சிறுவன் சிங்காரவேலனுக்கு, அந்தக் கலக காலத்துச்சம்பவங்களையே, வீட்டாரும் ஊராரும் கூறியிருப்பார்கள், பொழுது போக்குக்கோ, மிரட்டவோ, எக்காரணத்துக்காகவோ! கம்பெனிக்காரனைச் சிப்பாய்கள் எதிர்த்தனர், எதிர்த்தவர்களை வெள்ளைக்காரர் சுட்டனர் என்று சிறுவயதிலே அவர் கேள்விப்பட்டிருப்பார். நமது காலத்தைப்போல, கவர்னர் ஜெனரலின் கவிவு—கோகலேயின் தெளிவு—முதல் சீர்திருத்தத்தின் அழகு — என்பனபோன்றவைகளை அல்ல, அவர் சிறுவராக இருக்கும்போது கேட்டது. நாம், அடிமைத்தனத்திலே நாடு அதிகமாக ஊறிப்போன காலத்திலேபிறந்தோம்; அவர் ஆங்கிலேய ஆட்சியை ஆயுத பலத்தால் தாக்கிய சிப்பாய்க்கலகம், சிறுவர்களுக்கான சிறுகதையாகப் பேசப்பட்ட காலத்திலே பிறந்தவர். 1862-ல், சிப்பாய்க் கலகம் அடங்கி ஐந்து ஆண்டுகள் ஆனபிறகு அவர் பிறந்தார். புயல் அடித்து ஓய்ந்தது, ஆனால் சாய்ந்துபோனமரங்களிலே சில, பாதையிலே கிடந்தன! அப்படிப்பட்ட சமயத்திலே பிறந்தவர், சிங்காரவேலர், இறுதிவரையில் அவரைப் பொறுத்தவரையிலே 1857 தான், ஏகாதிபத்யம், முதலாளித்வம், வர்ணாஸ்ரமம், பௌராணிகம், இவைகளைத்தாக்கும் பேச்சுத்தான் அவருக்கு, மேடையிலே மட்டுமல்ல, வீட்டில்! பேச்சிலேமட்டுமல்ல, பார்வையே அப்படித்தான்.

மிதவாத மணிகள் மயிலையில்பல! தேசியக் கனவான்களும் உண்டு. சீமான்கள் உண்டு! சிங்காரவேலர், வழுக்கியிருந்தால், இதிலே எதில் வேண்டுமானாலும் தங்கிவிட்டிருக்கலாம். சட்டம் படித்தார், வக்கீல் ஆனார், ஆனால், எதற்கு? அன்னிய ஆட்சிக்காரன் சட்டம் தொகுப்பது; அதை நாம் படித்து வாதாடுவது, என்பது அடிமைத் தனத்தின் சின்னம், என்று கூறி, அந்த வக்கீல் அங்கியை நெருப்பிட்டுக் கொளுத்தினார்! கோர்ட்டை ஏற மறுத்து, மக்கள் மன்றத்திலே, வழக்கை எடுத்துரைத்தார் திறமையுடன். அவருக்கு ஜெர்மன், பிரஞ்சு, ரஷ்ய மொழிகளும் தெரியும். இந்தியாவிலேயே விஞ்ஞான அறிவுக்கலை சம்பந்தமாகவும், பொது உடைமை சம்பந்தமாகவும் அதிகம் படித்துப் புரிந்துகோண்டு, அந்த அறிவைக் கொண்டு மற்றவர்களுக்கும் அவை புரியும்படியாகச் செய்த பெருமைக்குரிய இடத்தில் முன் வரிசையில் முதலிடம் அவருக்கே அளித்தாக வேண்டும், ஓயாதபடிப்பு! உள்ளத்திலேவேதனை தரும் சகல பிரச்சனைகளுக்கும், அவர் காரண காரியம் தேடுவதிலேயே மிகக்கவலை எடுத்துக்கொண்டு உழைத்தார். நுனிப்புல் மேய்வது அவருக்குப் பிடிக்காது. பிரச்சனைகளைப்பூசி மெழுகிஞல் ஆத்திரப்படுவார்! வீண் ஆரவாரத்தால் மக்களை மயக்கும் இயக்கங்களைக் கண்டிப்பார். கடலோரத்திலே, கடைசியில்தானொருவனே உலாவுவதானாலும், கொள்கையின் தோழமை ஒன்று இருந்தால் போதும் என்று கருதினர். எனக்குறைய, கடைசி காலத்தில் அவர் தனி மனிதர் போலவே நின்றார். அந்த முதியவர், எவ்வளவு உரமான, புரட்சிகரமான கருத்துகளைத்தாங்கிக் கொண்டு இருந்தார் என்பதை எண்ணும்போதே ஆச்சரியம் உண்டாகும்.

"பேய், பூதம், பிசாசு உண்டா?" என்று கேட்டுவிட வேண்டியது தான், பேய்பூதம் பிசாசு என்ற சொல் எப்போது உபயோகத்திலே கொண்டு வரப்பட்டது என்பதிலிருந்து தொடங்கி, இன்று, பிறன் உழைப்பைக்கொண்டுவாழ்பவனே உண்மையான பேய், என்கிற வரையிலே, கூறிவிடுவார்; சந்தேகங்களைத்தெளியவைக்கும் முறையிலே, அவருடைய மனம், ஒரு சிறந்த அகராதியாக இருந்தது. அப்படிப்பட்டவரின் மறைவு, சர்வசாதாரணச் செய்தியாகி விட்டது. இந்த நாட்டிலே எண்ணற்ற பத்திரிகைகள் இருக்கின்றன, அவற்றிலெல்லாம் இலட்சிய வாதிகள் பேனா பிடித்துக்கொண்டு இருக்கின்றனராம்!

அவர் வீரர், தீரர், என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். கிளர்ச்சிகள் அவருக்கு நிலாச்சோறு. சிறைவாசம் அவருக்குச் சகஜம். அவர் எதிர்ப்புக்கோ, ஏகாதிபத்யத்தின் தாக்குதலுக்கோ அஞ்சினவருமல்ல. கும்பலோடு சேர்ந்து சிறைக்கூண்டுபோனவருமல்ல. தேசியத்தின் பேரால் முதன் முதல் 'கைது செய்யப்பட்ட பெருமை லோகமான்யதிலகருக்கு என்பார்கள். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், திலகரைத் தீண்டுவதற்கு முன்பே, தோழர் மா. சிங்காரவேலுவைத் தாக்கிவிட்டது. தேசிய ஆரவாரத்தினால் இந்த உண்மைமறைந்துபட்டது. கான்பூரில்

(6-ம் பக்கம் பார்க்க)

## விதைக்காது

8-ம் பக்கத் தொடர்ச்சி

விளக்கம் எவ்வளவு கூறினாலும், அரசபோகத்திலே ஆசைகொண்ட சீடனுக்குத்திருப்தி ஏற்படாது, ஆகவே அரசபோகத்தைவிட ஆரியருக்குள்ள யோகம் சிலாக்கியம் என்பதை நடவடிக்கையிலேயே காட்ட வேண்டும் என்று எண்ணிய கங்குபட்டர், "அசடே! உன் சந்தேகத்தைப் போக்குகிறேன், ராஜகிரி நகரிலே!" என்று கூறிவிட்டு, அழைத்துச் சென்றிருப்பார்.

★

கங்கைக் கரையிலே இருந்தவர்கள் அரசர்களை அடிபணியச்செய்யும் நிலையில் இருக்கும்போது, அவர்கள் ராசகிரியில் அரண்மனையில் உலாவும் அரசனாகப் பிறக்கவில்லையே, அல்லது அரசன் ஆகவில்லையே என்று கவலைப்படக் காரணம் உண்டா! நமது வார்த்தையை,—ஆசீர்வாதத்தை— கட்டளையை—எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறான் சிவாஜி! நாம் இஷ்டப்பட்டால் மட்டுமே அவன் அரியாசனம் ஏறமுடியும், அவனிடம் அரசு இருக்கிறது, அரசைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றலும் இருக்கிறது! இருந்தும்! நான் சம்மதித்தால் தான் அவன் அரசனாக முடியும்! நான் யார்? ஒரு ஆரியன்! அவன் அசகாய சூரன்! வாள் உண்டு அவனிடம், வல்லமை உண்டு அவனிடம், ஆனால் என் வார்த்தை அவனுக்குக் கிடைத்தால்தான், அவன் மன்னனாக முடியும்!" என்று அந்த ஆரியன் எண்ணியிருப்பான! எண்ணும்போது, அவன உள்ளத்திலே எவ்வளவு ஆனந்தம்—என்—ஆணவம் பிறந்திருக்கும்! ஆற்றங் கரையிலே ஆரியன் உலாவும் அதே நேரத்தில், அரண்மனையிலே உலாவும் சிவாஜியின் மனதிலே எவ்வளவு சோகம், சஞ்சலம், சந்தேகம் பிறந்திருக்கும்.

"அவர் என்ன சொல்கிறாரோ? ஆசீர்வதிப்பாரோ, முடியாது என்று கூறி விடுவாரோ?" என்று எண்ணிக் கவலையில் மூழ்கி இருப்பான். இவன் சிரத்திலே முடி இருக்கும், ஆரியன் அனுமதித்தால். இந்த நிலை கிடைக்கும்போது, ஆரியர், ஏன் அரசபதவியை அலட்சியமாகக் கருதமாட்டார்கள்?

★

"பாரடா, மண்டு, பார்! பார், நமக்கு நடக்கும் இந்த ராஜோபசாரத்தை! ராஜகிரியிலே, யார் இப்போது உண்மையான ராஜா! என் முன்பு விழுந்து வணங்குபவன், ஒவ்வொருவனும் அசகாய சூரன், யுத்தத்திலே ஜெயவீரன், எதிரிக்கு மார்காட்டத் தயங்காத தீரன்! ஆனால், இவர்களின் தலைவன் இனி நமக்குச் சீடன்!" என்று ராஜகிரியிலே வரவேற்கப்பட்ட வைபவத்தின்போது ஆரியக்குரு எண்ணமிருப்பான! வீராதி வீரனானாலும் விப்ரருக்கு அடங்கியே தீரவேண்டும் என்ற வேத நீதியை, வேதியர் புகுத்திய நியதியை, வர்ணாஸ்ரம முறையை, சனாதனச் சட்டத்தை, அந்தச் சமயம் அவர் போற்றாது இருந்திருப்பாரா! அந்தச் சட்டமல்லவா, ஆஸ்ரமவாசியை அரண்மனைக்கே அதிகாரியாய் நியமிக்கும் உயர்தர அதிகாரியாக்கி வைத்தது. படை வீரனும் சிவாஜியைப் படைபலம் அற்றவனிடம் பணிய வைத்தது! வாள் ஏந்திய வீரனைத் தன் தாள்பணியச் செய்தது. மனுவின் மகிமையால் அல்லவா, மண்டலாதிபதி மண்டியிடுகிறான் என்று எண்ணி அந்த மறையோன் மகிழ்ந்திருப்பான். "அசடே! அரசு வேண்டும், அரசனாக வேண்டும், என்று அற்பத்தைத் தேடாதே. அரசுகளை ஆட்டி வைக்கும் அதிகாரம் நம்மவரிடம் இருக்கும் வழியை நாடு! அதற்கான புராண இதிகாசாதிகளைப் பரப்பு! மக்களை அவைகளிலே நம்பிக்கை கொள்ளும்படி செய்! அரசர்கள் பிறகு உன் அடிமைகள்! அரசபோகத்தை அடைவாய், அதற்கான பொறுப்பும் உன்னை அண்டாது. ஆரியனே! அரசனாக வேண்டும் என்று ஆசைப்படாதே, அரசன் ஆரியதாசனாக வேண்டும் என்று ஆசைப்படு. அதற்காக, வேத புராண இதிகாசாதிகளைப் பரப்பும் காரியத்தை விடாமல் செய்!" என்று கங்குபட்டர் தமது சீடர்களுக்குக் கூறாது இருப்பாரா! அவ்வளவு நாட்களுக்கு முன்பு இருந்தவரின் எண்ணம் கிடக்கட்டும், நமது கண்முன் உள்ள ஆச்சாரியார், இப்போது கூறுகிறாரே, "பிராமணர்கள் தங்கள் குடும்பத்திலே கட்டாயம் ஒரு பிள்ளையை வேதம் படிக்க அனுப்பி விடவேண்டும்" என்று! ஏன் கூறுகிறார் அதுபோல? அவருக்குத் தெரியும், ஆரியம் விதைக்காது விளையும் கழனி என்று!!

**திருச்சி மாவட்டத் திராவிடர் மாநாடு**

3—3—46ல் சோழங்க நல்லூரில் தோழர் N. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திராவிட நாடு

காஞ்சி 24–2–46 ஞாயிறு

# திருமுகம்

நீடாமங்கலத்தில் நடைபெறும் திராவிட மாணவர் மாகாண மாநாடு, இனஎழுச்சி வரலாற்றிலே முக்கியமானதோர் சம்பவம். திராவிட மாணவர்களின் விழிப்பும் எழுச்சியும், நீதிக்கட்சியின் மறுமலர்ச்சி என்று தோன்றிய திராவிடர் கழகத்தின், வெற்றிகளிலே ஒன்று. திராவிட விடுதலைப் போர்ப் பாசறை அமைக்கும் அரும்பணிக்காக முன்வந்துள்ள, மாணவத் தோழர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். அவர்களின் நோக்கத்தை நாடு அறிய வேண்டும். அவர்கள் சார்பிலே, இந்தத் திருமுகம் தீட்டுகிறோம், திராவிட நாட்டினருக்கும், மாணவர்கட்கும்.

## நம் நாடு

நம் நாடு, "திராவிட நாடு"–ஒரு காலத்தில் பரந்த சாம்ராஜ்யமாக இருந்தது. இன்று நாம், பழைய அளவு முழுவதுங்கூடக் கேட்கவில்லை. சென்னை மாகாணம், என்ற எல்லையுள்ள இடத்தைக் கொடுத்தாலே போதும் என்று கூறுகிறோம். திராவிட நாடு என்ற திருப்பெயருடன், அதிலே நாம் தன்னாட்சி அமைக்க விரும்புகிறோம்.

## அளவு

திராவிட நாட்டின் அளவு, சிறியது என்று கூறிவிட முடியாது. இந்தியாவிலே ஒரு இணைப்பாக இருக்கும் நிலையிலே பார்த்தால், அப்படித் தோன்றும்; ஆனால் உலகிலே, தன்னாட்சியுடன் உள்ள பல்வேறு நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், திராவிட நாடு அளவில் சிறியது என்று கூறிவிட முடியாது.

## ஒப்பிடல்

சென்னை மாகாணத்தின் அளவையே நாம் இதுபோது திராவிட நாடு என்று கொள்கிறோம். இந்த அளவு 142000, சதுர மைல் ஆகிறது. இதனைக்கொண்டு, மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், "திராவிட நாடு" என்று நாம் எல்லைக் கோடிடும் இடம் இங்கிலாந்தைப் போல ஏறக்குறைய இருமடங்கு பரப்புள்ளது. 14, அல்பேனியாவுக்குச் சமம். 27 அல்ஸ்டர்களுக்குச்சமம். 4, ஆஸ்ட்டிரியாக்களைக்கொண்ட பரப்பு. 10, பெல்ஜியம், 2 ஜெக்கோஸ்லேவகியா, 3, கிரீஸ், 4, அயர்லாந்து, 10, ஹாலந்து, 4 போர்ச்சுகல், 14, பலஸ்தீன் இவைகளுக்குச் சமம்.

## குடிவளம்

திராவிட நாட்டின் குடிவளம் குறைவற்றது. சிலநாடுகள், இடம் விரிந்தும், அதற்கேற்றபடியின்றிக் குடிவளம் குறைந்தும் இருக்கும். இதற்கு நேர்மாறாக உள்ள நாடுகளும் உண்டு. இங்கு இத்தகைய இன்னல் இல்லை. சென்னைமாகாண ஜனத்தொகையின் எண்ணிக்கை சுமார் 4 கோடியாகும் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். தன்னாட்சியுடன் வாழவும், தக்க பாதுகாப்புடன் இருக்கவும், எந்த எதிர்ப்பையும் சமாளிக்கவும், கூடுமான அளவு குடிவளம் இருக்கிறது. அதிலும், "திராவிடர்கள்" திறமை, வீரம், உழைப்பு, உள்ளப்பண்பு, முதலியவற்றிலே குறை வில்லாதவர்கள். முன்னாள்முதலே, அவர்கள் முதல்வர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். வீரத்தைப்போற்றுபவர்கள். சாவுக்கு அஞ்சிப் பணிந்தவர்களல்ல. வாழ்வுக்காக மானத்தை இழக்க மறுத்த மரபினர். எனவே, இக்குணம் படைத்தவர்கள், தன்னாட்சியைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று உறுதியாகக் கூறலாம்.

## இயற்கை வளம்

திராவிட நாட்டின் இயற்கை வளம்போல், உலகிலே பல நாடுகளிலே காணமுடியாது. பனிமூடியோ, பாலைவனம் மிகுந்தோ, மலைமிகுந்தோ மண்மேடாகவோ இருக்கும் நாடுகள் உண்டு. ஒரு பொருள்கிடைத்து மற்றவை தம் கிடைக்காத நாடுகளும் உண்டு. திராவிட நாடு, இயற்கை வளம் குறைவறப் பெற்றுள்ளது. விளைபொருள்களுக்கு ஏற்ற இடம், அதற்காதாரமான ஆறுகள் பாய்ந்தோடும் அழகானநாடு. மலைவளம், காட்டுவளம் உண்டு. கடலோரக் காட்சியும் காணலாம், குன்றின் மேலேறிக் கோலமும் காணலாம்; புதைபொருள் உண்டு. நாகரிக வாழ்க்கைக்குத் தேவையான சகல சாதனங்களையும் நாம் பெறமுடியும். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான, உண்டி, உடை, இரண்டுக்கும், வெளிநாட்டவரை எதிர்பார்க்கவேண்டிய அவசியமேயின்றி, திராவிடர், தன்னாட்சியின் மூலம், திட்டமிட்டு வாழலாம். விஞ்ஞானகாலத் தேவைகளான, தாதுப்பொருள், மின்சாரம், ஆகியவைகளை ஏராளமாகப் பெறவும் வழி இருக்கிறது. புரண்டோடும் ஆறுகளெல்லாம், "அருட்பெருஞ் ஜோதி" யாக மாற்றப்பட வழி உண்டு. இயற்கை திராவிட நாட்டைச் சீராட்டுகிறது.

## இன வளம்

திராவிட இனம், மொழி வழி, தமிழர், தெலுங்கர், கேரளர், கன்னடர் என்று வேறுபட்டவர் எனினும், இனமூலம், கலை, வாழ்க்கை முறை, என்பவைகளிலே ஒன்றுபட்டவர்கள். இப்பிரிவினர்களுக்குள் உள்ள வேறுபாடுகள், முரண்பாடுகள் அல்ல. இவ் உண்மையை உணர்ந்தால், இனத்திலே ஓர் ஒருமைப்பாடு வந்து சேரும். இந்த வேறுபாடுகள் நீக்கக் கூடியன, நீக்காவிட்டாலும், கேடொன்றுமில்லை. இவை, இனத்தின்ஒருமைப்பாட்டைக் கெடுக்கக்கூடியனவல்ல. திராவிட இனவளம் வரலாற்றுஉண்மை. மாவீரர்கள், மதிவாணர்களை ஈன்றெடுத்த இனம். சிறந்த வணிகர்கள், சிற்பிகள், கவிகள், இசைவாணர்கள் இருந்தனர். தன்னாட்சியிலே தழைத்த மலர்கள், திராவிட நாட்டிலே நறுமணத்தைப் பரப்பின.

"புனலிடை மூழ்கிப்
பொழிலிடை உலவி
பொன்னார் இழையும்
துகிலும் பூண்டு
கனிமொழி பேசி
இல்லறம் நாடும்
காதல் மாதர்
மகிழுறும் நாடு"

என்று நமது கவிஞர், கூறினது கவிதை எழில் மட்டுமல்ல; உண்மை.

## முன்னாள்

முன்னாளில், இங்கு தன்னாட்சியும் தக்கோர் ஆட்சியும் இருந்ததால், இன்பவாழ்வு இருந்தது. பொன்சிகரமுள்ள மாளிகைகளைப் பற்றி, அகழிசூழ்ந்த கோட்டைகளைப்பற்றி, சோலையில் ஆடிய மயிலைப்பற்றி, அது ஆங்கு நடந்த நாரிமணியைக் கண்டு வெட்கமடைந்ததுபற்றி, வணிகரின் வளத்தைப் பற்றி, வீரரின் திறத்தைப்பற்றிப் படிக்கும்போது, இவை, இன்ப வாழ்வு பெற்ற இடத்துக்காட்சிகள் என்று எவரும் கூறமுடியும். முன்னாளில்,

"வானிடை மிதந்திடும் தென்றலிலே
மணிமாடங்கள் கூடங்கள்
மீதினிலே
தேனிடை யூறிய செம்பவள
இதழ்ச் சேயிழையா ரோடும்"

ஆடி இன்புற்ற நாடுதான் நம் நாடு. முன்னாள் பொன்னாளாகத்தான் இருந்தது என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

## இடை நாள்

முன்னாளுக்கும் இன்னாளுக்கும் இடையே, திராவிடநாடு, தேய்ந்தது. தீயர் கூட்டுறவால் திருஇடம் தீய்ந்தது. ஆரியரை அணைத்தது, உள்ளம் மெலிந்தது. கற்பனை உருவங்களைக்கைகூப்பித் தொழவும், நடமாடும் நயவஞ்சகத்தை நாதன் எனப்போற்றவும், உழைப்பவனை உதாசீனம் செய்து உத்த குரலோனை ஆதரிக்கவும்தொடங்கிற்று. ஒரு இனத்தின் அழிவுக்குக்காரணமாக உள்ள அனைத்தையும், திராவிடம்கண்டது கொண்டது, எனவே முன்னாள் பெருமையும் மாண்டது.

## இந்நாள்

இந்நாள், 'திராவிடநாடு' என்பதே புதியதோர் பெயர் போலத் தோன்றும் நிலைமை. திராவிடம், இந்தியாவிலே ஒரு பகுதி. வீழ்ந்த ஜெர்மனியில், பிரிட்டிஷ் ஆட்சிஒரு மாவட்டத்திலும், சோவியத்ஆட்சி வேறோர் மாவட்டத்திலும், வேறு ஆட்சிவேறு புறத்திலும் என்று இருக்கக்காண்கிறோம். ஒரு ஆர்ப்பாட்டக்காரனை நம்பி அழிவுப்பாதையிலே சென்றதால் அந்நாட்டுக்கு இந்நிலை. நம்நாட்டு நிலையோ, ஆங்கில ஆட்சி, வாழ்க்கையின்ஒரு பகுதியில், ஆரிய ஆட்சி வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும், வடநாட்டவர் ஆட்சி பொருளாதாரப் பகுதியிலே, நமக்கு எங்கும் தன்னாட்சி இல்லை! எங்கும் நல்லாட்சி இல்லை! தன்னாட்சியைவிட நல்லாட்சி இருக்கமுடியாதல்லவா? இவ்வளவுக்கும், நாம், யாரிடமும் தோற்கவில்லை. அவள் அதரம் நச்சு நீர்ஊற்று என்று அறியாது, இன்ப வல்லியின் இதழைச் சுவைத்துக் கொண்டே கீழே சாய்ந்தவன் போலாயிற்று திராவிட நாட்டின் கதி. திராவிடநாடு, ஆரியத்தின் வேட்டைக்காடு! ஆங்கிலருக்கு, அடிமைகள் வாழும் கூடு! வடநாட்டவருக்கு, வகையில்லார்வாழும் சந்தை! இந்நாள் நிலையில், திராவிடர், எடுப்பார் கைப்பிள்ளையாகி, நாடு, இனம், மொழி, யாவும்மறந்து, சிறுவாழ்விலே உள்ளனர். களை நிரம்பிய கழனி, சேறு நிரம்பிய குளம், கரைபடிந்த துகில், என்றாகிவிட்டது. அறிவுப்பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறதுஇங்கு. ஆண்மையாளர்கள், அஃதிலாருக்குஅடிமையாயினர். திராவிடம் இன்று கேவலம் ஓர் கேலிச்சித்திரமாகிவிட்டது.

## கொடுமைகள்

ஒரு இனம், அழிக்கப்படுவது கொடுமை, அதனினும் கொடுமை, அந்த இனத்தவரையே அதனை அறிந்துகொள்ள முடியாதபடி அறியாமையில் ஆழ்த்திவைத்திருப்பது. வாழ்ந்த வணிகனிடம் கையாளாக இருந்தவன், வஞ்சகத்தால் உயர்ந்து, உயர்ந்த நிலையிலே, வீழ்ந்த வணிகனைத்தனக்குக் குற்றேவல் புரிபவனாக்கிக்கொள்ளல் கொடுமை. காணச்சகிக்காத கொடுமை! அதனினும் கொடுமையை நாம் காண்கிறோம், நமது கண்களிலே இரத்தம்கசியவில்லை. ஆசியச்சமவெளியிலிருந்து ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு, பச்சையான இடம்நாடி வந்தவர் ஆரியர் என்று படிக்கிறோம். அந்த நேரத்தில் திராவிடம் உலக வல்லரசுகளில் ஒன்றாகத்திகழ்ந்ததென்றும் படிக்கிறோம். அந்த ஆரியனின் வழிவந்தவனின் அடிபணியும் திராவிடனை இன்று காண்கிறோம்! இதனினும் கொடுமை வேறு என்ன காணவேண்டும்! குயிலுக்குக் கோட்டான் இசை கற்றுக்கொடுக்கிறது, மயிலுக்கு மந்தி நடனம் கற்றுக்கொடுக்கிறது, என்றால் நம்புவரோ! ஆரியர், தமிழருக்கு, மதம், கலை, நாகரிகம், சட்டம், யாவும் கற்றுக்கொடுத்தவர்; ஆரியமத கலை நாகரிகம் சட்டம் ஆகியவைகளைத் திராவிடர் ஏற்றுக்கொண்டுள்ளனர். வெற்றிபெற்ற ஆங்கிலேயனால், இந்திய பூபாகத்தைக் கிருஸ்துநாடு ஆக்கமுடியவில்லை, வெற்றிபெறவாள் எடுக்காத ஆரியத்தால், திராவிடத்தை, ஆரிய சேவாபீடமாக மாற்றிவிட முடிந்தது. உலக வரலாறு முழுவதும் தேடினாலும் இதற்கு ஈடான வேறோர் கொடுமையைக் காண முடியாது.

## விசித்திரம் - ஆனால் உண்மை

இன்று, ஏக தெய்வம், உருவமற்ற ஆண்டவனை வழி படுவதே உயர்ந்தோர் மார்க்கம் என்பதை உலகு முழுதும் கொண்டாடுகிறது. இங்கு மட்டுந்தான், கடவுள்கள் கூட்டம் கூட்டமாக உள்ளனர்! எல்லாவித உருவங்களிலும் உள்ளனர்! ஏக தெய்வவழிபாட்டுக்காரர் குறைவற்ற வாழ்வு வாழ, கடவுட் கூட்டத்தைக் கட்டிவாழும் இங்கு, வாழ்வேபெருஞ்சுமையாகி, 'பிறவா வரம் தாரும் பெம்மானே' என்று புலம்புகிறோம்.

மற்ற இடங்களிலே ஆண்டவன் வந்துவந்து போனதில்லை! இங்கு அடிக்கடி வந்து போயிருக்கிறார். ஒவ்வொரு தடவையும், பாபத்தைப் போக்கவே வந்திருக்கிறார்; வந்து போன பிறகு மீண்டும் மீண்டும் பாபம் தலையெடுத்து ஆடுகிறது.

மற்ற இடங்களிலே, மக்கள் யாவரும் சமம், ஒரு நாட்டிலுள்ளவர்கள் ஒரு தாயின் சேய்கள் என்ற எண்ணம், எண்ணத்தோடு நில்லாமல் அது உறுதிப்படவும் கெடாதபடியும் பார்த்துக்கொள்ள ஏற்பாடுகள் உள்ளன. இங்கு "வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மாந்தரென்றால் சூழ்கின்ற பேதம் அத்தொகை இருக்கும்" என்ற நிலை இருக்கிறது.

மற்ற இடங்களிலே வீரர்களுக்குக்கோட்டம், இங்கு கோட்டங்களிலே வீணருக்கே இடம்.

மற்ற இடங்களிலே அறிஞர்கள் போற்றப்படுவர், இங்கு, ஆரியனன்றி அறிஞர் இலர், என்று எவன் ஒப்புக்கொள்கிறானோ அவனே அறிஞன்!

மற்ற இடங்களில் உழைப்புக்குப்பெருமை, இங்கு உயர்ந்தோன் உழைக்கலாகாது என்பது தான் நியதி.

மற்ற இடங்களிலே, பழைமைக்குக்கல்லறை, இங்கே புதுமைக்குச் சித்திரவதை.

இங்கு இன்றும் வேள்விகள், யாகங்கள், வேதபாராயணங்கள், குருபூஜைகள், அபிஷேகாதிகள், ஆராதனைவகைகள், யாவும் உண்டு. இவையாவும், மனிதன் காட்டுமிராண்டிப் பருவத்திலே கற்றுக்கொண்டவைகள், அறிவுக்காலத்துக்கு இவை ஆகா, என்று மற்ற இடங்களிலே விட்டு விட்டனர்.

மற்ற இடங்களிலே, ஜூவஸ், மினர்வா, அபாலோ, நெப்ட்யூன், தார், ஓடின், ஜுபிடர், முதலியஎண்

ணற்ற "கடவுள்களை", வேலையினின்றும் நீக்கி விட்டனர். இங்கு இன்றும், காட்டேரி, முனியனைக்கூடக் கைவிடவில்லை.

மற்ற இடங்களிலே, அறிவாளியின் மொழியைக்கேட்டு அரசுகள் நடக்கின்றன, இங்கு ஆரிய மொழிப்படி நடப்பதே அரச தர்மம் என்ற எண்ணம் பலமாக இருக்கிறது.

இந்த நாட்டிலே தான், நீங்கள் வாழுகின்றீர்கள் என்பது கவனமிருக்கட்டும்.

## உலகில் நம் நாடு

மரத்தாலான ஏர், மண்வெட்டி, கூடை, முறம் பாய்மரமுள்ள படகு, கயிற்றால் ஆனவலை, கட்டை வண்டி, கைராட்டினம், இவைகளைக்கண்டுபிடித்த அளவிலிருந்து, காற்றை அளக்கும் கருவி, காரிருளைப்போக்கும் மின்சாரம், கடலுக்குள் குடைந்து செல்லும்கலம், காதருகே உலகைக்கொண்டுவந்து சேர்க்கும் கருவி, இவைகளையும் இவைகளையும் விட அதிஅற்புதமான முறைகளையும் கண்டுபிடித்த வெளி உலகு, எவ்வளவு வளர்ந்திருக்கிறது, அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இங்கு நாம், எந்த அளவோடு நின்று இருக்கிறோம் என்று எண்ணிப் பாருங்கள்.

இந்த நாட்டிலே நீங்கள் "தீண்டாத மனிதனை"ப் பார்க்கிறீர்கள்! இந்த நாட்டிலே "சேரிகளை"ப் பார்க்கிறீர்கள். இங்கே "தொடாதே! எட்டி நில்!" என்று கூறும் பார்ப்பனரைப் பார்க்கிறீர்கள்! அவன் வாழும் அக்ரகாரத்தையும் பார்க்கிறீர்கள்! மேனிகருத்தவனை, மேனி மினுமினுப் புடையவன், உழைப்பவனை உறுஞ்சி வாழ்பவன் மிரட்டக்காண்கிறீர்கள். நாயும் பன்றியும் நடமாடினாலும் சகித்துக் கொள்பவர்கள், மனிதனை, "தாழ்ந்தகுலம்" என்று தள்ளி வைத்திருப்பதைக் காண்கிறீர்கள்.

அதிகாரிகளை அடிமை கொள்ளும் அதிகாரியாய், படித்தவனை பணியச் சொல்லும் குருவாய், பணக்காரனைப்பணம் திரட்டிப்பாத காணிக்கையாகத் தரச்சொல்லும் ஆசார்யனாய் வாழும் ஆரியர்களைக் காண்கிறீர்கள்.

இங்கே பஞ்சை பராரியை, பட்டினிப் பட்டாளத்தையும் பார்க்கிறீர்கள், பவனிவரும் பட்டுப்பட்டாடைக்காரனையும், அவன் கொட்டு முழக்குடன் தூக்கிவரும் கோயில் சாமிகளின் கோலாகலத்தையும் காண்கிறீர்கள்.

பாட்டாளியின் உடலிலே சேறு இருக்கக்காண்கிறீர்கள். பாடுபடாதவன் உடலிலே சந்தனம் இருக்கக்காண்கிறீர்கள். தரித்திரம் தாண்டவ மாடுவதையும் பார்க்கிறீர்கள், 'தனலட்சுமிகளாக' உள்ளவர்களையும் காண்கிறீர்கள்.

இந்த நிலை போக வழி என்ன என்ற ஆராய்ச்சியிலே ஈடுபடாமல், வந்த நிலைக்குக் காரணமாக வியாசர் கூறுவது என்ன, வேதம் சொல்வது என்ன என்ற ஏடு புரட்டும் வேலையிலே ஈடுபடும் பெரியவர்களைப் பார்க்கிறீர்கள்.

ஜாதிக்குள் ஜாதி, குலத்துக்குள் குலம், ஒன்றுக்கொன்று சச்சரவு, என்ற பேதத்தின் பெருங்கூத்தைப் பார்க்கிறீர்கள். பேசவாயில்லையா? கேட்கத் துணிவில்லையா? எதிர்க்கத்தைரியமில்லையா? இதற்கெல்லாம் நேரம் இல்லையா? இவை உமது கடமை அல்லவா?

## தேசியம்

தேசியம் பேசுவதால், இவற்றுக்கெல்லாம் நேரம் இல்லையாம். இந்நாடு, அன்னியனிடம் அடிமைப்பட்டிருக்கும் 'ஒருதொல்லை' மட்டுமே இருப்பதானால், அந்தத்தொல்லையை ஒழிக்கப் பாடுபட்டால் போதும் என்று கூறுவது அறிவுடைமையாகும். வண்டிக்கு அச்சு முறிந்திருக்கிறது, 'கழுத்துக்கட்டு' காணப்படவில்லை, சக்கரத்தில்கிளைகள் ஒடிந்துகிடக்கின்றன! மாட்டின் கொம்புக்கு வர்ணம் பூசிவிட்டால், வண்டிபூட்டிவிட முடியுமா? நாட்டிலே உள்ள 'அடிமைத்தனம்' ஒன்றல்லவே! குப்பைமேட்டின் மீது குரைத்துக் கொண்டிருக்கும் நாயைக், குறிபார்த்து அடிக்க வேண்டுமானால், நமக்கும் கொஞ்சம் உயரமான இடம் வேண்டுமே, நின்று கொண்டு கல்வீச! கைவலிக்கப் பல கல்வீச வீச, குப்பைமேட்டிலே, ஒருஇடத்திலிருந்துவேறோர் இடத்துக்கு நாயும் நகர்ந்துகொண்டிருக்குமே. தப்பித்தவறி ஓடினாலும், கல் வீசும்சத்தம் நின்றதும், குக்கல் மறுபடி வந்து சேருமே! அடிமை மனப்பான்மை என்ற குப்பைமேட்டின்மீது குடி ஏறி இருக்கும், அரசியல் அடிமைத்தனத்தை ஓட்ட, கிளர்ச்சி எனும் கல்வீசிக்கண்டது என்ன? குப்பை மேட்டைக் கலைத்துவிட்டால், குக்கல் தானாகப்போய்விடுமே! சமுகக் கொடுமையை ஒழிக்கத்தொடங்கினால் அல்லவா, குப்பைமேடு குலையும். எத்தனை காலத்துக்குத்தான் 'தேசியத்திரை'யினால், சமுகக்கொடுமைகளை மக்கள் அறிய ஒட்டாதபடி தடுத்துவைக்கமுடியும்.

## ஒருவர்தானே!

விசித்திர வைதிகர்களை வீதிசிரிக்கச்செய்தார் சாக்ரடீஸ், உலகுணராதவர்களுக்கு அது உருண்டை என்று உரைத்து உதைபட்டார்கலிலியோ! வைதிகத்தின்மடைமையை வாட்டினார் வால்டேர்! மக்கள்மன்றத்துக்கு மதிப்புதர வேண்டுமென்றார் ரூசோ. வேத புத்தகத்தை விற்று விபசார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தனர், விக்ளிப், ஜிவிங்லி, மார்ட்டின் லூதர் போன்றோர். அடிமைகளை விடுவித்தார் ஆபிரகாம்லின்கன், முதலாளியின் கொடுமையைஎடுத்துரைத்தார் காரல்மார்க்ஸ், அவர்களுக்காகப் போராடினார்லெனின், சீனரின் சிறுமதியைப் போக்கினார் சன்-யாட்-சென், துருக்கியரின்மதி தேய்வதைத்தடுத்தார்கமால், இறைவன்பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச்சந்திசிரிக்கவைத்தார் இங்கர்சால், பேதைமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னாட்ஷா! வாழ்க்கையிலே வாட்டம் வேதனை, வறுமையின் கொடுமை வஞ்சகத்தின் ஆட்சி இவைகளிருப்பதை படம் பிடித்துக் காட்டினர், கோர்க்கி, டார்கினவ், டாஸ்டாவஸ்கி, சிங்களேர், போன்ற எண்ணற்றவர்கள். இவர்களும் இன்னமும் எண்ணற்றவர்களும் தோன்றித் தொல்லைப்பட்டு, தூற்றப்பட்டு, கொடுமைக்கு ஆளாகி, மனிதசமாஜத்தின் மறுமலர்ச்சிக்காக, கொள்கைகளை, புதுக்கோட்பாடுகளை, எவருக்கும் எதற்கும் அஞ்சாது எடுத்துக்கூறிப், பாமரனுக்காகப்போராடியதால், இன்று பல்வேறு நாடுகளிலே, மக்களின் மனம் விடுதலை பெற்றது. அடிமை மனப்பான்மை அகன்றது. அதனால் அங்கு, ஒரு நாட்டை இன்னோர் நாடு அடக்க முடியவில்லை! அடக்கினால், எரிமலை கக்குகிறது, மக்கள் மனமென்னும் கடல்பொங்கி வழிகிறது, புரட்சிப் புயல் வீசுகிறது, அதன் முன்பு, எந்தக்கொடியவனாலும்நிற்கமுடியவில்லை. இங்கே, நடக்கும் கொடுமைகளைக், கண்டிக்க, எடுத்துக்கூற, எதிர்க்க, பெரியார் ஒருவர்தானே இருக்கிறார்!

## பொருளாதாரம்

பாடுபடுபவன் பசித்திருக்கப், பாடுபடாதவன் பரிமளவாழ்வுடன் இருப்பது, முதலாளித்துவமுறை, சுரண்டல்முறை அல்லவா? சுரண்டல் முறையை ஒழிக்க வேண்டுவது அவசியமல்லவா? பாடுபடாத பார்ப்பன இனம், பாடுபடும் திராவிட இனத்தின் உழைப்பிலேவாழ்கிறதே. இதை ஏன் திருத்தவில்லை.

கோடிக்கணக்கிலே பொருள் முடங்கிக்கிடப்பது, ஆரிய மத அமைப்பு முறைப்படி அல்லவா? ஆண்டுதோறும், அதே முறையினால் கோடிக்கணக்கிலே பணம் விரயமாகிறதல்லவா? இந்த 'விரயம்' நீக்கப்பட்டு, ஏழைகள் வயிறு நிரப்ப உணவு கிடைக்கச்செய்வதற்கு என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது?

விளைபொருள்களை வெளியே அனுப்பிவிட்டு, செய்பொருளை வாங்கியே ஒரு நாடு இருக்குமானால், அந்நாட்டுச் செல்வநிலை சீரழியாதா? வடநாட்டு நிலை அப்படி இருக்கிறதா? சகல பொருள்களும் அங்கே செய்யப்பட்டு இங்கே விற்கப்படுகிறதே, இதன் பலனாகத்திராவிடம்பட்டிக்காடாகவும், வடநாடு "குபேர பட்டினமாகவும்" மாறிவருகிறதே! இது, முறையான பொருளாதார வளர்ச்சியா? இரும்பு, பருத்தி, முதற்கொண்டு சகல தொழில் வளமும் வடநாட்டிலிருக்கிறதே. தொழிற்சாலைகள் அங்கே வளர்ந்து, ஆலை அரசர்கள் ஆட்சிசெய்கின்றனரே! நாம் இங்கே "ஆடுராட்டே" பாடினால், வாட்டம் ஓடுமா?

நம்நாட்டு 'முதல்' பர்மா போய்விட்டதே; நம்நாட்டு மக்கள் தூரக்கிழக்குத் தேசங்களிலே கூலிகளாகித் துயர் உறுகிறார்களே! இங்கு 'பனியா படை எடுப்பு' நடந்ததே; இந்த நிலை வளர வளர, நாட்டின் சீரும்சிறப்பும் நசித்துப்போகாதா? நாடு நசிவதைப் பார்த்துக்கொண்டிருப்பதுதானா, நாட்டு மக்கள் கடமை? நாதியற்றநாடாகத்தான், திராவிடம் போய்விட வேண்டும்?

## பிளவும் பிரிவும்

பிளவு கேடுபயப்பது! பிரிவு அக்கேட்டைப் போக்கக் கூடியது. இந்தியாவிலே பிளவுகள் உள்ளன. பிளவுகளின் கேட்டினாலேயேபிரச்னைகள் பலவும் தீர்க்கமுடியாததாகிவிட்டன. எங்கெங்கு, தனித்தனி பிரிவுகள், தன்னைத்தான்காப்பாற்றிக்கொள்ளக்கூடிய, தன்னாட்சி நடத்தக்கூடிய பிரிவுகள், அமைக்க முடியுமோ, அவ்விடங்களிலே தனிநாடுகள் அமைத்துவிட்டுப், பிறகு, அந்தந்தநாடுகள், தத்தமது காரியத்தைத் தானாகக் கவனித்துக்கொள்ளும் ஏற்பாடு இருந்தால், என்பிறகு, இந்தநாடுகளுக்குள் ஓர் தோழமை உண்டாகக்கூடாது! தோழமை, சமபலமுள்ள இருவருக்குள் தானே இருக்கமுடியும். சுரண்டும் பாகம் சுரண்டப்படும் பாகம் இரண்டும் ஒன்றாகவே இருக்கவேண்டுமானால், தொல்லையும் துயரமும், துவேஷமும் வளருமே யொழிய, தோழமைஎங்கிருந்துமுளைக்கும்?

ஐரோப்பாவிலே உள்ள தனி நாடுகளெல்லாம் கூடி, ஐரோப்பா ஒருநாடு, நாம் யாவரும் ஒரேகுடையின் கீழ்வரவேண்டும் என்று கூறுகின்றனவா? திராவிடத்தைமட்டும், தனிநாடு ஆகக்கூடாது என்றுகூற யாருக்கு, என்ன அதிகாரம் இருக்கிறது? என்ன நியாயம் இருக்கிறது? மேலும், திராவிடநாடு, தன்னாட்சியோடு, தனிநாடாக இருந்ததுதானே. இழந்த இன்பத்தைத் தானே மீண்டும் கேட்கிறோம். இது எந்தத் தர்மத்துக்கு விரோதம்!

## விடுதலை

"இந்தியா" பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திடமிருந்து விடுதலை பெற வேண்டும். ஆனால் அந்த விடுதலை மட்டும்போதாது. இனத்தைஇனம் அடக்கிக் கொடுமை செய்வதினின்றும் ஒவ்வோர் இனமும் விடுதலை பெறவேண்டும். முதலாளித்வ முறையிலிருந்து மக்கள் சமுதாயம் விடுதலை பெறவேண்டும். வைதிகப் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும். பழையகாலஎண்ணம் ஏற்பாடுகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். இவைகளுக்குப் பாதகமாக உள்ள சூழ்ச்சி சுயநலம், பசப்பு, புரட்டு இவையாவும் ஒழிந்தாக வேண்டும். ஆங்கிலேயனை அதட்டிக் கேட்கப் பயிற்சிபெற்று விட்டோம்; அவனும் இந்தியா, இனித் தங்கக் கம்பியாக இராது, அது தணலில் போட்டெடுத்த இரும்பு என்பதைக் கண்டுகொண்டான். ஆனால் 'விடுதலைப்போர்' ஒரு சிறையிலிருந்து மற்றோர் சிறை செல்வதல்ல. வெள்ளை ஏகாதிபத்யத்தை விரட்டி வேதியமதாதிபத்யத்திலே மாட்டிக்கொள்வது, விடுதலை அல்ல! பரங்கியின் பிடியிலிருந்து விலகி பனியாவின் பிடியிலே சிக்கிக் கொள்வது, விடுதலை அல்ல. இந்திய விடுதலை என்ற இனிப்புப்பூச்சின் சுவையைக் கண்டு, மனு, மார்வார் கம்பெனிதயாரிக்கும் மாத்திரையையும் உட்கொண்டு, வீணராய், வறியராய், திராவிடர் ஆகிவிடக்கூடாது.

ஆகவேதான், 'திராவிடநாடுதிராவிடருக்கே' என்று முழக்கமிடுங்கள்; உரிமைக்காகப் போராடுங்கள்; என்று கூறுகிறோம். திராவிடநாடு, நம்நாடு; நல்ல வளமுள்ள நாடு; தன்னாட்சிக்கு ஏற்றநாடு; அதனைப்பெற, அதிலே தன்னாட்சி தழைக்கப், பணிபுரிவதே, திராவிட வாலிபனின் இன்றையக் கடமை. இதற்கு முன்பு வேறுஎன்றும் இல்லாத அளவுக்குஇக்கடமை இன்று நம்மை அழைக்கிறது. இது விடுதலைப்போர்க்காலம்! வீணருக்கு உழைத்து வீழும்காலம் அல்ல!

இந்நாளில் வாழும் நீங்கள் திராவிட விடுதலைப்போர்ப் படையின் முன்னணி வீரர்கள். உங்களுடைய முன்னேற்றத்தைப் பொறுத்தே படையின் வளர்ச்சியும், வெற்றியும்இருக்கிறது. எனவேவீரர்காள், முரசு கொட்டுக! "வளமார் எமது திராவிடநாடு வாழ்க! வாழ்கவே!!


## டெண்டர் நோட்டீஸ்

1946—47 வருஷத்திய ஜில்லாபோர்டின் ரஸ்தாக்களின்மராமத்து வேலைகளுக்காக 1946-ம் வருஷம்மார்ச்சுமாதம் 6-ந்தேதிமாலை 4-மணிவரையில் ரிஜிஸ்டர் கண்ட்ராக்டர்களிடமிருந்து சீல்வைக்கப்பட்ட டெண்டர்கள் பெற்றுக்கொள்ளப்படும், இதன் விபரங்களும் டெண்டர் பாரங்கள் முதலியவைகளும் சைதாப்பேட்டை ஜில்லா போர்ட் இன்ஜினியர் ஆபீஸிலிருந்து ஆபீஸ் நேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

சைதாப்பேட்டை
14—2—46

(ஒப்பம்) எ. அர். சிவசாமி,
ஜில்லாபோர்ட் என்ஜினியர்,
சைதாப்பேட்டை.

## சிந்தனைச் சிற்பி

3-ம் பக்கத் தொடர்ச்சி

பொது உடைமைக்காரர்கள் என்ற குற்றத்துக்காக, பிரிட்டிஷ் ஏகாதிபத்யர், தோழர் சிங்காரவேலுவை யும், மௌலானா அசரத் மோகானி யையுந்தான் முதன் முதல் கைது செய்தது.

'தொழிலாளர்கள்" என்று ஒரு பிரிவினர் உள்ளனர் என்ற உண்மையையே, நாடு அறியும்படி முதலில் எடுத்துக்கூறிய பெருமையும், மா. சிங்காரவேலு உடையதாகும். இங்கிலாந்திலே தொழிலாளர் கிளர்ச்சி ஆரம்பமானபோதே, இங்கு இவர், அத்தகைய கிளர்ச்சியைத்துவக்கினர்.

கூனன்போல் காணப்பட்ட இந்தியாவின் நிலையைக்கண்ட சிங்காரவேலு, முதுகெலும்பு வளைந்ததால் கூனி நடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதைக்கண்டு பிடித்து நாட்டுக்கு முதுகெலும்பு தொழிலாளரே என்பதை அறிந்து, அந்தத் தொழிலாளரின் விழிப்புக்காக வேலைசெய்யத் தொடங்கினர். தொழிலாளர்கள், மதத்தின் பேராலும், அரசியலின்பேராலும், மௌட்டீகத்தாலும் அடக்கப்பட்டு வரும் கொடுமையைக்கண்டு கொதித்தார்.

அவருடைய அபாரத் திறமை தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தின் போது நன்கு விளங்கிற்று. அச்சமயம் அவர் பத்து ஆண்டு தண்டனை தரப்பட்டார்.

ரயில்வே வேலை நிறுத்தம் நான்கு நாட்கள் வெற்றிகரமாக நடந்ததைக்கண்டு, ரயில்வே தலைமை அதிகாரி, ரயில்வே தொழிலாளர்களுடன் சமாதானத்திற்கு வருவதைத் தடுத்தவர்களும், தாலும் தனது சகாக்களும் கடுந்தண்டனை பெற்றதிலிருந்து தப்பி அபீல்மூலம் மீண்ட காலத்தில், அதற்கு எதிரிகளாக இருந்தவர்களும், பெசண்டு அம்மையாரும் அவர்தம் சிஷ்ய கோடிகளும்தான் என்பதைத் தோழர் சிங்காரவேலர் நன்கு உணர்ந்தார். ரயில்வே வேலை நிறுத்தத்தில், இந்நாட்டுப் 'பத்திரிகை ஜாதி' செய்த பொய்ப் பிரசாரம் அன்றைய ஒரு லட்சம் தொழிலாளர் வாயில் மண் போட்டது என்பதற்கும், பின்தலை எடுக்கவேண்டிய கோடானுகோடி தொழிலாளரின் தன் விழிப்புக்குத் தடைக்கல்லாக இருந்தது என்பதையும் கண்டபின்பு, அவர் மனமாறுதல் அடைந்தார். தொழிலாளர் சமூகம் உண்மையாக நியாயம் பெற வேண்டுமானுல், முதலாளிகளான வெள்ளை முதலாளி, கருப்பு முதலாளி ஆகிய இவர்களின் பிடியிலிருந்து விடுதலையாகுமுன், முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் உண்மையில் துரோகிகளாகவுள்ள போலித்தொழிலாளர் தலைவர்களும் அவர்கள் பத்திரிகைகளும் தொலைய வேண்டுமென்று எண்ணினர். அவர் தொழிலாளர் இயக்கத்திலிருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு வந்ததற்குக் காரணம் இதுவேயாகும்.

தோழர் சிங்காரவேலர் சிறந்த ஒத்துழையாதார். நல்ல வரும்படி வந்த காலத்திலும் காந்தியத்தில் நம்பிக்கைகொண்டு தனது வக்கீல் வேலையை விட்ட, ஒரு சில சென்னை வக்கீல்களில் சிங்காரவேலர் முதன்மையானவர். காங்கிரசின் பேரால் வக்கீல் வேலையை விட்டு, பின்பு, மீண்டும் கோர்ட்டுக்குப்போன வக்கீல்களில் சிங்காரவேலர் சேர்ந்தவரல்ல. சிறந்த ஒத்துழையாதாராகவே இருந்தார். சென்னையில் பொது மக்களின் பேரால் நடந்த பெரிய "கிளர்ச்சிகள்" நான்கு என்று சொல்லலாம். சூளையில் வேலைநிறுத்தம், பிரின்சப்வேல்ஸ் பகிஷ்காரம், சைமன்பகிஷ்காரம், கானுட்டுக் கோமகன் பகிஷ்காரம் என்பவைகளில் தோழர் சிங்காரவேலர் முதல் மூன்றிலும் பூரண பங்கெடுத்துக் கொண்டார். இதேகாலத்தில் அமெரிக்காவில், சாக்கோ, வான்சிட்டி என்ற இரண்டு பொது உடைமைத் தோழர்கள், பொதுஉடைமை வழக்கில்சம்மந்தப்பட்டு எலக்ட்ரிக்மூலம் கொல்லப்பட்டார்கள். இச் செயலைக்கண்டிக்கச், சென்னை பீப்பில்ஸ் பார்க்கில் தோழர் சிங்காரவேலர் ஓர் பிரம்மாண்டமானகூட்டத்தைக் கூட்டினர். மாகாண சர்க்கார் பயந்து தனது போலீஸ்படை முழுவதையும் அனுப்பி அக்கூட்டத்தைப் பயமுறுத்தியது. அன்றைய கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஒத்துக்கொண்டவரும், பிரசங்கம்செய்யச் சம்மதித்தவர்களும் போலீஸ் ஆர்ப்பாட்டத்தைக்கண்டு அஞ்சி அந்தப் பக்கமே வரவில்லை.

மனம் அலுத்த சிங்காரவேலர் தனியாகப் பீப்பில்ஸ்பார்க் பக்கம் வந்தார். தன் நண்பர்கள் யாவரும் வரவில்லையே என்பதற்காகப் பயந்து விடவில்லை. கூட்டமோ இவ்வளவு தடபுடலாகக் கூடாது என்று எண்ணிவந்த சிங்காரவேலர் அங்கு கண்டதென்ன? பிரம்மாண்டமான கூட்டத்தையும், அதன் மத்தியில் ஒருவர் சமதர்மப் பாடல் பாடுவதையும், இரண்டு மூன்று இளைஞர்கள் மேடைமீது இருப்பதையும் கண்டார். தான் எதிர்பாராத சம்பவம் நடப்பதைக்கண்டு ஓர்சிறிய புன்னகையுடன் மேடையருகில் வந்துபார்த்தார். மேடைமீதுஇருந்தவர்கள் தனக்குப்புதிதாய் இருந்தாலும், அன்று தான் எடுத்துக் கொண்ட வேலைக்கு தனக்கு உதவியாக இருப்பதைக்கண்டு, ஆச்சரியப்பட்டார். கூட்டமே நடக்காது என்று எண்ணியவர் சென்னைப் பொதுமக்கள் இவ்வளவு போலீஸ் மிலிட்டரியைப் அலட்சியப்படுத்திக் கொடுமையாகக் கொல்லப்பட்ட இரண்டு அமெரிக்கத் தொழிலாளர்களிடம் அனுதாபம் காட்டி, அவர்கள் கொள்கையை ஆதரிப்பதற்கு அறிகுறியாக இக்கூட்டம் கூடும்படி செய்த சென்னைப் பொதுமக்களைப் பாராட்டினர். இக்கூட்டத்தில்தான், காலஞ்சென்ற சிங்காரவேலரின் கவனம் சுயமரியாதை இயக்கத்தின் பக்கம் திருப்பப்பட்டது. பட்டுக்கோட்டைத் தோழர் அழகர்சாமிசொன்னர், 'செருப்புத் தைக்கும் சமூகத்திலும், மீன்பிடிக்கும் சமுகத்திலும் பிறந்த இரண்டு தொழிலாளர்கள் அமெரிக்கச் சர்க்காரால் தண்டிக்கப்பட்டார்கள். தொழிலாளர் சமூகப் விழிக்கு முன்பு, இத்தகைய சம்பவங்கள் பல நிகழவேண்டும். நமது நாட்டுத் தொழிலாளர் உலகம் கண்விழித்து இத்தாலிய மீன்பிடிக்கும், தொழிலாளியான வான்சிட்டி இறந்ததைப்போல், நமது உண்மைத் தொழிலாளர் தலைவரான சிங்காரவேலர் இந்நாட்டுவான்சிட்டியாகச் சர்க்காரால் தண்டிக்கப்பட்டு, அக்கூட்டத்தைக்காண ஆசைப்படுகிறேன் என்று. இச்சொல் ஒன்றே சிங்காரவேலரைச் சுயமரியாதைக் காரனாக்கியது.

சுயமரியாதை இயக்கம் சமதர்மம், இந்நாட்டு மக்களுக்குத் தக்கபடி எடுத்துச்சொல்லி, 'மார்க்சீசம்' என்பதன் பொருளாதார தத்துவத்தைச்சாதாரணமானவரும் உணரும்படி செய்த பெருமை இந்நாட்டில் இருவரையே சாரும். மற்ற மற்ற மாகாண மக்கள் பொது உடைமைத் தத்துவத்தை உணர்ந்திருப்பதற்கும், இம்மாகாண மக்கள் அதிலும் தொழிலாளர் இயக்கம் பொது உடைமையை உணர்ந்திருப்பதற்கும் இன்னும் ஏராளமான வித்தியாசம் உண்டு. மார்க்கீசத்தைக் கரைத்துக் குடித்து எவரும் எளிதில் உணரும்படி எழுதியும் பேசியும் வந்தவர்கள் பெரியார் இராமசாமி அவர்களும், தோழர் சிங்காரவேலருமே யாகும். தோழர் சிங்காரவேலர் சுயமரியாதை இயக்கம் வளருவதற்குப் பெரிதும் பாடுபட்டார். அவரின் உழைப்பை எந்தச் சுயமரியாதைக்காரனும் மறக்கமாட்டான்.

எல்லா மக்களும் இன்பவாழ்வு பெற வேண்டுமென்ற சிறந்த இலட்சியமே அவருக்கு. இது கிடைக்கவிடாமல் தடுப்பது எதுவாக இருப்பினும், அதனைத் தவிடு பொடியாக்க வேண்டுமென்று அவர் துடித்தார்.

ஏகாதிபத்யம், மதவாதம் இரண்டுமே முடக்குவாத நோய்தான் சமுதாயத்துக்கு என்பதை அவர் எவருக்கும் அஞ்சாது கூறினர். அவருடைய தீவிர வாதத்தைக் கண்டு திகில் கொண்டவர்கள் அவரை நாத்திகர் என்று கூறினர்; அவர் அதனை ஏற்றுக்கொண்டார்; சென்னையில் நாத்திகர் மாநாட்டையே நடத்தினர்; இந்தியாவிலேயே யாரும் செய்யாத காரியம் அது. மதத்தின் மீதும் கடவுளின் மீதும் பாரத்தைப் போட்டுவிட்டு, பழிபாவத்துக்கு அஞ்சாமல் பாமர மக்களைக்கசக்கிப்பிழியும் வர்க்கத்தை நோக்கி, அந்த மாவீரர் கேட்டார்.

'உலகில் உயிர்கள் படுந்துயரத்திற்கு யார் ஜவாப்தாரி? பசுவைப் புலிபிடித்துத் தின்னவும், தேரைப் பாம்பு பிடித்து தின்னவும் யார் கட்டளையிட்டார்? இந்தக் கொடுரக்காட்சியை விடவா வேறு உளது? நோய், வறுமை, பஞ்சம், புயல் வெள்ளம் முதலிய இயற்கைச் சம்பவங்களால் மாந்தருக்கு எவ்வளவு இம்சை?

கடவுளை தயாபரன், சர்வரட்சகன், ஆபத்பாந்தவன் அன்பன் என்ற மாத்திரத்தில் இந்தக் கொடுமைகளை மறக்கமுடியுமா? சமணர்களைக் கழுவில் ஏற்றினது கடவுள் பெயரால் அன்றோ? கோடானகோடி பிசாசு பிடித்தவர்களென்று பெண்மக்களை அடித்துக் கொன்றது கடவுள் பெயரால் அன்றோ? கிருஸ்தவரும் முஸ்லீமும் கோடிகோடியாக 500 வருஷ காலம் கொடும் போரில் மாண்டது சாமி பெயரால் அன்றோ? சாமி பெயரால் எத்தனை கோயில்கள், கட்டிடங்கள் இடிந்தன. எத்தனை நாடுகள் நகரங்கள் நாசமாயின.?"

இவ்விதமாக, எதிரி திணறும்படியான கேள்விகளைப் பச்சை பச்சையாகக் கேட்பார் மா. சிங்காரவேலர். அவரும் மனப்பண்பிலும், மதியூகத்திலும் அவருடைய இணையாக இருந்த பெரியாரும் ஒன்றுகூடி, சுயமரியாதை இயக்கத்தை நடத்தியபோது, நாடே அதிர்ந்தது, சர்க்காரும் நடுங்கிற்று என்று கூறலாம். காசியில் சிக்கிக்கிடந்த மக்களை அவர்கள் கைபிடித்து இழுத்து மாஸ்கோவுக்கு அழைத்தனர்.

★

நான் கடைசியாக அவரைக்கண்டது, நான்மேலே குறிப்பிட்ட அவருடைய அருங்குணத்தை விளக்கக்கூடிய ஒரு சம்பவமாகவேஇருந்தது. இரண்டுமுதியவரும், பெரியார் இராமசாமியும், தோழர் சிங்காரவேலரும் ஒரே மேடையிலே உட்கார்ந்திருந்தனர், 20-6-43ல் சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில். அன்று அங்கு தீண்டாமை ஒழிப்பு நாள்! தளர்ந்த உடல். தள்ளாடும் நடை, நரைத்த தலை, இக்கோலத்திலே இருந்தார் மா. சிங்காரவேலு. தீண்டாமை ஒழிப்புதினம் என்று கேள்விப்பட்டதும், அவர், 'தள்ளாமை" யையும் மறந்து, அங்கு வந்திருந்தார். பாட்டாளி மக்களின் சுயமரியாதைக்காகவும் சுகவாழ்வுக்காகவும் போராடிய அந்தப் புரட்சி வீரரை அன்று நான் கடைசி முறையாகக் கண்டேன். அவர் மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டேன், திடுக்கிடவில்லை, ஆனல் திகைத்தேன், இனிஅத்தகைய ஓர் மாவீரன் கிடைப்பாரா, என்று. மறைந்த மாவீரருக்கு நமது மரியாதையைச் செலுத்துவோமாக. அவர் வகுத்த மார்க்கம் பழுது படாதபடி பாதுகாத்து, அவருடைய இலட்சியமாகிய மக்கள் ஆட்சி மலருவதற்காக, நாமும் உழைப்போமாக என்று மாவீரரை மதிப்போரெல்லாம் உறுதி கொள்வார்களாக.

---

## திறந்த மடல்

★

ஆசிரியர், தினமணி, சென்னை.

**பார்ப்பனிய—பனியா பத்திரிகாசிரியரே!**

தங்களின் போக்கும், தாங்கள் ஆசிரியராகயிருந்துவரும், தினமணியின்கொள்கையும் வர வர மாறி கழுதைபோல் ஆனுள் என்ற முதுமொழிக்கு ஏற்ப யிருந்து வருகிறது.

சில நாட்களுக்குமுன் தங்களுடைய பத்திரிகையில், திராவிட இனத்தைச் சார்ந்த நாடார் சமுகத்தினரை மிகவும் இழிவுபடுத்தும் முறையில் செய்திவெளியிட்டிருந்தீர்கள் அதாவது, தோழர்காமராஜ் அவர்கள் மதுரை—பழனி கோயிலுக்குள் சென்றதுபற்றி. தோழர் காமராஜ் எக்காரணம்பற்றியோ அதுபற்றி கவலைப்படாதிருந்தாலும், அவரைத்தவிர அச்சமுகத்தைச்சார்ந்த, ஏன் திராவிட இனமேஉள்ளக் கொதிப்படைந்துள்ளது என்று கூறுவதுமிகையாகாது, அதைத் தாங்களும் அறிவீர்கள்,

பலதோழர்கள் (காங்கிரசிலிருக்கும்; நாடார் சமுக தோழர்கள் உட்பட) தங்களது இரத்தத்தைத்தோய்த்துக்கண்டனக் கடிதம்எழுதியிருக்கின்றார்களாம்.

இராயபுரத்தைச்சார்ந்த ஒருபிரபல காங்கிரஸ் தோழர்கூட சு. மி. பத்திரிகையில், இந்த அகம்பாவத்தைக்கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆண்மையுள்ள ஒவ்வொரு நாடார்வகுப்பினரும், பொதுவாக திராவிட இன் எழுச்சிபெற்ற அனைவரும் தங்கள் தினமணி பத்திரிகையின் அடாதசெய்கையைக்கண்டித்தே வருகின்றனர்.

அடாது செய்தால் படாதுபடுவீர்என்பதைத்தங்களுக்கு நினைவூட்டியும் தங்களின் குணம்மட்டும் தங்களைவிட்டு குறைந்தபாடில்லை. ஒரு பெரும் சமுகத்தை அதுவும் வீரஉணர்ச்சி பெற்ற, நாட்டை ஆண்ட, நாளைநாட்டை ஆளப்போகின்ற திராவிட இனத்தைச்சார்ந்த முக்கிய சமுகமாகிய நாடார் மக்களை, அந்நாட்டிலே பிச்சையெடுக்கவந்த, கும்பலும், நாட்டைக்கெடுப்பது, காட்டிக்கொடுப்பது, நயவஞ்சகத்தால் வாழ்வது, ஆகியஇன்னோரன்ன பல குணங்களையே பிறப்புரிமைபாகக் கொண்ட ஆரிய வர்க்கம் பழிப்பதா! ஒழுங்கு, கொள்கை நாட்டுப்பற்று ஆகியவைகள் இருந்திருப்பின் தங்களின் பத்திரிகையில் ஒரு பெரும் சமுதாயத்தை இழிவு படுத்திய செய்கைக்காக பகிரங்கமாகக் கூட்டம் போட்டு மன்னிப்பு கேட்டிருப்பீர்கள். ஆனல், ஏதோ சர்வசாதாரண தவறுபோல் பத்திரிகையில் சிறிய அறிக்கை மூலம் மழுப்பிவிட்டிருக்கிறீர்கள்.

இந்த அறிக்கையைக்கண்டுஅச்சமுகம் ஏமாந்துவிடும் என்று தாங்கள் கருதுவீரேயானல், அந்த அலட்சியக்கருத்தே நாளை தங்கள் இனத்தவர்கள் இந்நாட்டை விட்டு, வெள்ளையனுக்கு முன்பே வெளியேறும் நிலைமைக்கு அடிகோலியாகும்! வெறும் 'பூணூலைமட்டுமே நம்பியருக்கும் ஆரியத்திற்கே இவ்வளவுநெஞ்சுறுதி ஏற்பட்டுவிட்டதென்றால் வாளைக்கையிலேந்தி போர்தொடுத்துவீரக்கொடிநாட்டியதிராவிட இனம் சீறினுல் தங்களின் நிலைமை என்ன ஆகும்! சிந்தித்துப்பாருங்கள் சற்று.

உங்களுக்குத்தான் சிந்தனைசக்தியில்லையே! அவ்வாறு இருந்திருந்தால், செய்த தவறினுல், மனக்கொதிப்பு ஏற்பட்டுள்ள சமுதாயத்தை மேலும் அதிகப்படுத்த விரும்புவீரா?

**கூத்தரசன்.**

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


## விதைக்காது

2-ம் பக்கத் தொடர்ச்சி

சொன்னதுபோல, ‘என் இராஜ்யம் இந்தப்பூலோகத்தில் இல்லை’ என்ற ஞானோபதேசம் செய்யவில்லை. எவ்வளவு பித்தம் இந்தச் சீடனுக்கு அரசு அமைக்காமலும், அமைந்த அரசு அழியாது பாதுகாக்கவும் பகலும் பாடுபடவேண்டிய தொல்லை துளியுமின்றி, தாக்கமின்றிக் கிடந்து தொல்லைதரும் ராஜ்யத்தைக் கட்டிக்காவல்புரியும், பலகாவலர்களை, ஏவலராகப் பெற்றுள்ள இந்நிலையைச், சாமான்யமென்று எண்ணுகிறானே இந்த ஏமாளி, என்று எண்ணிச்சிரித்தனர். அந்தக்குருதேவர்கள் அரசுகள் அமைக்கவில்லை, ஆனால் ஏசு சொன்னதுபோல, இந்த அரசு அல்ல என் இலட்சியம் என்று ஞானமார்க்கம் பேசவுமில்லை, அரசுகளை ஆட்டிவைத்தனர். காய்ச்சி வைத்த பாலைப் பருகினர், அதிலே கற்கண்டுப்பொடி குறைவு என்று குறை கூறிக்கொண்டு! அரைத்து வைத்த சந்தனத்தை உடலெங்கும் அப்பிக்கொண்டனர், அரைத்த முறை அவ்வளவு சரியில்லை என்றும் குறை கூறிக்கொண்டு. கோலம் துறவுதான், ஆனால் குறைவற்ற இன்பத்தைக் கேட்டுப்பெற்றனர். ஏசு, இராஜ்யம் வேண்டேன், ஏனெனில் என் இலட்சியம் மனிதசமாஜத்திலே தர்மராஜ்யம் ஏற்படுத்த வேண்டும் என்பதே என்றார், இந்தக்குருதேவர்களும் இராஜ்யம் வேண்டாம் என்றனர், இராஜ்யம் கூடாது என்பதற்காக அல்ல, ராஜ்யாதிகாரிகள் நமக்குச்சேவைசெய்யும்போது நாமே இராஜ்யம் அமைத்துச் சிரமப்படுவானேன், என்பதற்காக. பொதுநலம் என் இலட்சியம், ஆகவே சுயநலநோக்கமாகிய இராஜபோகம் வேண்டேன் என்றார் ஏசு! இங்கே குருமார்கள் இராஜ்யம் வேண்டாம் என்று சொன்னது, சுயநலம் கூடாது என்ற பெருநோக்கத்துடன் அல்ல, இராஜ்யத்தை ஆள்வதால் கிடைக்கக்கூடிய சுகத்தை, அந்த இராஜ்யத்தை ஆள்வதற்காக எடுத்துக் கொள்ளவேண்டிய சிரமமுமின்றி அடையவேண்டும் என்பதற்காக. விதைக்காது விளையும் கழனி இருக்க, விதைத்தால் மட்டுமே விளையக் கூடிய கழனியை யார் விரும்புவர்? இத்தகைய ‘குருமார்’ கூட்டமே, பண்டையநாட்களிலே, கொற்றவர்களை எல்லாம் இங்கே ஆட்டிப் படைத்திருக்கிறது. அந்தச் சிறு கூட்டமே, ஆரிய அகராதிப்படி, ரிஷிகள், தவசிகள், முனிவர்கள், என்று அழைக்கப்பட்டது.

★

அயோத்தியிலே அரசாண்ட தசரதன், தன் ராஜ்யத்தின் பாதுகாப்புக்காகப் பயங்கரமாகப் போர் புரிந்தான், மற்ற மன்னர்களும் அப்படியே, ஆனால் வசிஷ்டன், தன்னுடைய குருஸ்தானத்துக்காகச் சிரமப்பட்டதில்லை. எந்தக்காரியத்துக்கும், வசிஷ்டரின் ஆலோசனை கோரப்பட்டது. அவ்வளவு நிலை, ‘வசிஷ்டர்’ பெற்றது வாள் பலத்தாலா? இல்லை! அவருடைய நா அசைந்தால் எத்தனையோநாட்டுப் படைகள், தசரதன் மீது போருக்குக்கிளம்பிவிடும்! எந்த ராஜ்யத்திலும், அவர் ‘குருஸ்தானம்’ பெறமுடியும், எந்த அரசனையும், தன் மொழிவழிகொண்டு செல்லமுடியும். ஆகையினாலேதான், அந்தச் சிறுகூட்டத்தைச் சார்ந்தவர்கள், அவசியமற்ற தொல்லை வேண்டாமென்று கருதி, அரசுகளை ஆளும் பொறுப்புள்ள காரியத்தைத்தாமே மேற்போட்டுக்கொள்ளாமல், மற்றவர்களை அந்தப் பொறுப்பு என்ற பாரத்தைச் சுமந்துகொள்ளச்செய்து, அவர்களுக்குப்பக்கத்தில் இருந்துகொண்டு, “அரசே! இப்படிச் செய்வதே முறை! இது தகாது!” என்று உபதேசித்துக்கொண்டும் எச்சரிக்கை செய்துகொண்டும் வாழ்ந்தனர். அரசர்கள் அரசுகளை ஆண்டனர், ஆரிய குருமார்கள், அரசர்களை ஆண்டுவந்தனர்! இந்தமுறை அயோத்தி அரசில்மட்டுமா? எங்கும்! அந்நாள் மட்டுமா? இந்நாளும்! இப்போதும், திருவிதாங்கூரின் திவான்ஜிக்குத் திருப்புகழ்பாடும் அளவுக்கு மன்னருக்குப்பாடுகிறார்களோ! திவானுடைய திருக்கலியாண குணங்களைப்பாராட்டுகிற அளவுக்கு, மன்னருக்கு உண்டோ? மன்னருக்கு இருக்கிற பெருமைகளில் ஒன்றாக வன்றோ, மதியூகியும், பராக்கிரமமான சச்சிவோத்தமர் சர். சி. பி. இராமசாமி ஐயரைத் திவானாகக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி கூறப்படுகிறது. இந்த “சூக்ஷமம்” அந்தநாள் தொட்டுத்தெரியும் அந்தச்சிறு கூட்டத்துக்கு. ஆகவேதான், அன்றுமுதலே, அரசர்களாகிவிடுவதைவிட, அரசர்களை ஆட்டிவைப்பதுமேல் என்ற தந்திரத்தைக் கையாண்டனர், அரண்மனைவாசத்தைவிட, ஆஸ்ரமத்தில் இருந்துகொண்டு அரண்மனை வாசியைத் தாசனாக்கிக் கொள்வது, யுக்தம் என்று கருதினர். முக்கனிதேடி அலைவதைவிட, தனித்தனி முக்கனிபிழிந்துவடித்து ஒன்றாகக்கூட்டித் தருவதற்குத் தக்கதோர் சீடனைப் பெற்றுவிடுவது, அல்லல் இல்லாத ஆனந்தமல்லவா! அது அவர்களுக்குத்தெரியும். அந்த நாட்களிலே, ஆஸ்ரமங்களிலே, ஜடாஸ்போல, இருந்த சந்தேகிகளின், எண்ணத்தைக்குருமார்கள் எப்படிப்போக்கினார், என்பதைச்சிந்தித்துப்பார்த்தால் தெரிந்துகொள்ளலாம்.

★

கங்கைக்கரை! ஆங்கோர் ஆஸ்ரமம்! பிரவாகத்தின் சத்தம், அதனுடன் போட்டியிடுவது போன்ற வேதஒலி மற்றோர்புறம். இயற்கை எழில்! புள்ளிமான் துள்ளிவிளையாடுகிறது! குயிலின் கீதம், மயிலின் நடனம்! மரக்கிளைகளெல்லாம் மதுரத்தைப்பொழிந்துகொண்டு விதவிதமானபட்சிகள்! ஒருசிறுபரிவாரம், வேதத்தைப் பாராயணம் செய்துகொண்டு, அவர்களுக்கு ஒரு குரு, இதத்தில் இலயிக்காமல் பரதத்தைப் பற்றிய எண்ணத்தில் ஈடுபட்டனர். அவர் உடலில் பொன்னாபரணமோ சிரத்தில் மணிமுடியோ கிடையாது. ஆஸ்ரமத்தருகே இரதகஜதுரக பதாதிகள் கிடையாது! சீடர்களிடம் வாள் வேல் கிடையாது. உடலிலே தழும்பு கிடையாது. உள்ளத்திலேயோ, உலகின் முதல்வனை உணரவேண்டுமே, அதற்கு என்ன வழி என்பதன்றி வேறு கவலை கிடையாது.

அதேநேரத்தில், டில்லியில் மகோன்னதமான மாளிகை. அதற்கருகே பாசறை! அங்கே போர்ப்பயிற்சியிலே ஈடுபட்டபல்லாயிரவர்! அவர்கள் உடலிலே தழும்புகள். மாளிகைக்குள்ளே மன்னன்! அவன்முன் பல்வேறுநாட்டு ஒற்றர்கள். அவர்களிடம் தத்தமது பார்வையிலே விடப்பட்ட பிரதேசங்களிலே உள்ள பூபதிகளின் படைபலம், நோக்கம், நிலைமை ஆகிய தகவல்களைத் தரும் ஓலைகள்!

இந்த இரு இடங்களிலே எங்கு இருந்தவருக்குச் சுகம்? ஆஸ்ரமத்தின்மீது ஆஸ்ரமம், படை எடுக்காது! சதிரக்கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு அரண்மனையைத் தரைமட்டமாக்க அதே சமயத்திலே, வேறோர் அரண்மனை சதியாலோசனை மண்டபமாக மாறி இருக்கும்! ஆஸ்ரமவாழ்வு, அரண்மனைவாழ்வு இரண்டிலே, எது விதைக்காது விளையும் கழனி?

கங்கைக்கரையிலே, (கங்குபட்டர்) காகபட்டர் என்ற குருகொலுவீற்றிருக்கிறார் ஆஸ்ரமத்தில்! அவருக்குக்கவலை ஏது? தில்லியிலே அதே போது அவுரங்கசீப் இருக்கிறார் அரண்மனையிலே. அவருக்கு எவ்வளவு அல்லல், தொல்லை.

ராஜகிரியில் ஒரு அரண்மனை. அதைச்சுற்றிலும் அசகாய சூரர்கள். அவர்களின் தலைவர் சிவாஜி. அவர் அரண்மனைக்குள்ளே இருக்கிறார், அவருடைய நினைப்புமுழுதும் அவுரங்கசீபின் படைபலத்தின்மீது! அவுரங்கசீபின் எண்ணம் யாவும், மலர்ந்த மராட்டியத்தின் மனம் தில்லிவரை பரவுகிறதே என்பது பற்றி! இரு இடங்களிலும் இருந்த படைவீரர்களின் பேச்சு, இன்னின்ன போரிலே இன்னின்ன ஆபத்துகள், இப்படி இப்படித் தப்பினோம் என்பதுபற்றி. கண்ணிழந்த தம்பி, கைஇழந்த அண்ணன், கால்இழந்த மாமன், உயிரையே இழந்த உத்தமர்கள், இவர்களைப் பற்றியபேச்சு. நடந்தசண்டைகள் இடிந்த கோட்டைகள், ஒடிந்த உள்ளங்கள், அழிந்தகுடும்பங்கள், ஓடிய இரத்தவெள்ளம், இவைபற்றிய உரையாடல்மட்டுமா, இனிவர இருக்கும் இன்னல், மூள இருக்கும் போர், அதிலே ஏற்பட இருக்கும் ஆபத்து இவைபற்றியும் பேச்சு. ஓயாததொல்லை! தீராத கவலை! தழும்பு நிரம்பிய உடலம்! இவை, அரண்மனைகளிலே. ஆஸ்ரமங்களிலே? எரியாத அகில், தேயாத சந்தனம் இருக்கக்கூடும். புரியாத மந்திரங்களை உச்சரிக்கும் மதிநிறையாத சீடர்கள் உலவக்கூடும். வாழ்க்கையின் வேதனையோ, மாற்றானின் விரோதமோ, இராது. அது மகிழ்ச்சிமாளிகை! அரண்மனையோ, மனதை மருட்டும் இடம்! எனவேதான், கங்குபட்டர், தில்லியிலே இருந்த அவுரங்கசீபைப்போலவோ, ராஜகிரியில் இருந்த சிவாஜியைப் போலவோ, மணிமுடி தரித்துக் கொள்ளும் மன்னனாக இருக்கும் தொல்லையான பதவியைத் தேடவில்லை. மாறாக, மணிமுடிதரித்தவனைத் தன்முன் மண்டியிடச்செய்தார்!

★

“குருதேவா! குதிரை வீரர்கள் யாரோ வருவது தெரிகிறதே?”

“வரட்டுமே! இங்கே, எந்தக் கோட்டை இருக்கிறது, அவர்கள் தாக்க, பிடிக்க. போரிடுவதற்கு இதுவா இடம்? இது பூஜா மடம்! இங்கே வருபவன் பூஜைக்கு வருவான், வேறுகாரியத்துக்குஇதுவா இடம்?”

“எந்த நாட்டவரோ?”


“யாராக இருந்தால் என்ன? நாம் என்ன ஒரு நாட்டுக்கு அரசரோ, மற்ற நாடுகளைப்பற்றிச் சந்தேகிக்கவோ, பயப்படவோ?”

சஞ்சலப்படும் சீடனைத் தேற்றிவிட்டுக் குருசாவதானமாகத் தன் காரியத்தைப்பார்க்கிறார். குதிரை வீரர்கள், ஆஸ்ரமத்துக்குக் கொஞ்சம் தொலைவிலேயே, குதிரையை விட்டுக் கீழே இறங்கி, பயபக்தியுடன் நடந்துவருகிறார்கள். குதிரைகளை மரத்திலே கட்டிவிட்டு, ஆஸ்ரமத்துக்குள் நுழைந்து, கங்குபட்டர் முன் விழுந்து வணங்கிப்பணிவுடன் கூறுகிறார்கள்.

“குருதேவா! தாங்கள் தயைகூர்ந்து, ராஜகிரி எழுந்தருளவேண்டும். மராட்டிய மாவீரர் சிவாஜி, தங்கள் தரிசனத்துக்காகவும், தங்கள் யோசனையை ஒருமுக்கியமான விஷயமாகக்கேட்கவும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்” என்று கூறுகின்றனர்.

இந்நிலையில், அரண்மனையில் அரசனாக இருக்கவேண்டும் என்ற எண்ணம், உப்புச்சப்பற்றதுஎன்று யாருக்குத்தான் தோன்றாது! மாவீரன் சிவாஜி, மராட்டியத்தின் மாணிக்கம். மொகலாய சாம்ராஜ்யமே அவன் பெயரைக் கேட்டுக் கொஞ்சம் நடுங்குகிறது. அவன் தன் வாள் பலத்தால் ஒரு அரசு அமைத்திருக்கிறான். அவனுடைய கட்டளையை எதிர்பார்த்து இலட்சக்கணக் கானவர்கள் உள்ளனர். அவன் பொருட்டுக், களத்திலே

(அடுத்த பக்கம் பார்க்க)

ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிபலத்தைச்சுகமாய்ப்பெருக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—
M. E அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.


“நிர்மாணத்திட்டம் உருப்படியானமுறையில் இல்லை” அருணா அசப் அலி.

## சொல்வதை, எழுதேண்டா!

1-ம் பக்கத் தொடர்ச்சி

இங்கே ''இராமாயணம்'' படித்தாரே, அந்தப்பட்டாபிஷேகச்செலவுக்கு. அப்படிப்பட்டவன் அந்தத் திவான்பகதூர் என்று கூறினார் ராகவாச்சாரி. மேலும்சிறிதுயோசனைக்குப்பிறகு, தருமசிந்தனையாள குணத்துடன், பகவத் கடாட்சம் பெற்றஎன்றபதத்தைச் சேர்த்தார், வாசகத்தைபூர்த்திசெய்ய, "பகவத் கடாட்சம் பெற்ற தங்களைப் போன்றவாளுக்கு அதிகம் சொல்லத்தேவையில்லை." என்று கூறினார். கடிதம் முடிந்தது. மண்டு சோம்பல் முறித்தான். ராகவாச்சாரி, கையோடுகையா இன்னும்ஒருலெட்டர் எழுதிவிடு, பஞ்சுவுக்கு என்றார். மண்டு, எழுதஉட்கார்ந்தான். "ஜர்னலிஸ்டு' லெட்டர் பேப்பர் எடுடா'' என்றார். "சிரஞ்சீவிபஞ்சநாதனுக்கு, ஆசீர்வாதம். இன்று இதேதபாலில், திவான்பகதூர் தீர்த்தகிரிமுதலிக்கு ஒரு லெட்டர்எழுதி இருக்கேன், உனக்கு அவசரமாக ஐம்பதுரூபாய்தரும்படி; தருவான். அதைவாங்கிக்கொண்டு, உனக்கு ஐந்தோ பத்தோ செலவுக்குத் தேவையானால் எடுத்துக்கொண்டு, மிகுதிப்பணத்துக்கு, ஆறு கெஜத்தில் ஆரஞ்சுகலரில், பெங்கால்சில்க் சேலை விற்கறதாமே சைனாபஜாரில், அதைஉன் அக்காவுக்காக உடனே வாங்கி அனுப்பவும். அடுத்த வியாழக்கிழமை இங்கே ஜில்லா கலெக்டர்வருகிறார், என்னமோ, சைன்யத்துக்கு நிதி திரட்டவாம். அதிலே நம்மவருக்கு, எதிராத்து ராஜம், நம்ம கோடிவீடு செவிட்டுச்சீமாவின் பார்யா இருக்காளே சண்பகம், இவாளெல்லாம், பெங்கால்டான்ஸ் ஆடப்போறாளாம். ஆனதாலே புடவை அவசரம். தீர்த்தகிரிமுதலி கொஞ்சம் முன்கோபி. வள்ளுன்னு விழுவன். சட்டை செய்யாமே, கொஞ்சநேரம் இருந்தா, பணத்தைத்தந்து விடுவன். பக்குவமாப் பேசணும் அவனிடம். முகஸ்துதியிலே ரொம்பப்பிரியம். பெரியகர்மி. இருந்தாலும், நம்மிடம் பணம்தருவதற்கு மறுக்கமாட்டான். அவன் தான், நம்ம ராமபக்தஜன சபாவுக்குப்போஷகன். திவான்பகதூர்பட்டம், அவனுக்குக்கிடைச்சதுக்கே, அதுதான் காரணம்னு சொல்லிவைச்சிருக்கேன். சமயம் வாய்ச்சா நீயும் சொல்லு. எப்படியும் பணத்தைவாங்கிவிடு, அசடாட்டம்இருந்துவிடாதே."

இது மகனுக்குத் தகப்பனார் அனுப்பும் கடிதம். இதனைச் சிரமமின்றி மண்டு எழுதிவிட்டான், குறுக்குக்கேள்வியே கேட்காமல். ஏனென்றால் ராகவாச்சாரியாரின் "முறை" யைப்புரிந்து கொண்டான்.

"அடடே! மறந்து விட்டேன். இன்னும்ஒருவரிசேர்க்கணும் பஞ்சு லெடரில்'' என்று சொன்னார் ராகவாச்சாரி. "சொல்லுமே, இடம் இருக்கு" என்றான் மண்டு. "தீர்த்தகிரி வீட்டுக்குப் போகும்போது, கொஞ்சம் உலர்ந்த உதிரிபுஷ்பமும் மஞ்சத்தூளும் ஒருகாகிதப்பொட்டலத்தில் மடித்துஎடுத்துக்கொண்டுபோய், அப்பாஊரிலிருந்து அனுப்பினார் என்று கொடு'' என்று, கூறிக் கடிதத்தைப் பூர்த்திசெய்தார்.

★

ராகவாச்சாரியாரின் தபால்கள் பயணப்பட்டன. பெங்கால் சில்க் சேலையைப் பற்றிய நினைப்புடன்ருக்கு, நடைபழக ஆரம்பித்தாள், அதுவே ஒரு புதுதினுசு டான்சாக இருந்தது. தபால்கள் போய்ச் சேர்ந்தன, ஆனால் முதலியாருக்குச் சேரவேண்டிய கடிதம், பஞ்சுவுக்கும், பஞ்சுவுக்குச் சேரவேண்டிய கடிதம் முதலியாருக்கும் போய்ச்சேர்ந்தன. பெங்கால்சில்க்காகிடைக்கும்,? திவான் பகதூர் தீர்த்தகிரி முதலியார், ராகவாச்சாரியாரை, "அயோக்யன்? நன்றி கெட்டவன்! நயவஞ்சகன்! அவனை என்ன செய்கிறேன்பார்'' என்று ஏசி, பஞ்சுவையும் உதைப்பதாக மிரட்டியதையும் பற்றி விரிவாக எழுதி, முதலியார் விலாசமிட்ட கவரில், பஞ்சுவுக்கு எழுதிய கடிதத்தையும், பஞ்சுவிக்கு அனுப்பிய கவரில், முதலியாருக்கு எழுதிய கடிதத்தையும், மண்டு கைதவறி வைத்து அனுப்பிவிட்டதால் நேரிட்ட விபரீதத்தையும்விளக்கி, பஞ்சு தகப்பனாருக்கு விரிவாகக் கடிதம் எழுதினபிறகே, மண்டுவால் வந்த ஆபத்தை ராகவாச்சாரி உணர்ந்து, சோகித்தார்.

"சொன்னதைத்தானே எழுதினேன்'' என்று மண்டுமுணமுணத்தான். தலையில் அடித்துக்கொண்டு ராகவாச்சாரி "நீ இல்லைடா, மண்டு. நான் மண்டு. உன்னைக்கொண்டு இந்தக்காரியத்தில் இறங்கினேனே என்னைச் சொல்லணும்'' என்றார். கொஞ்சநேரம், யோசனையில் ஆழ்ந்துவிட்டு, "டே! மண்டு! வா! உன்னை விட்டாலும் வேறுகதிஇல்லை எனக்கு. போய் ஜர்னலிஸ்டு லெடர் பேப்பர் எடுத்துவா'' என்று கூப்பிட்டுச்சோகம் கப்பிய குரலிலே, ராகவாச்சாரியார் சொன்னார், மௌனமாக, மண்டுஎழுதினான்.

### ராம பக்தஜனசபா

"இவ்வூர், ஸ்ரீராம பக்தஜனசபாவின் போஷகராக இருந்துவந்த திவான் பகதூர் தீர்த்தகிரிமுதலியார், ஆச்சாரவிரோதமாக நடந்து வருவதாக, ஷை சபா தலைவர் ஸ்ரீமான் ராகவாச்சாரியார் அவர்களுக்கு, மெம்பர்கள்புகார்செய்து கொண்டதன் பேரில், தலைவர்விஷயத்தைப் பரிசீலனை செய்து, புகாருக்கு ஆதாரமிருப்பது தெரியவந்ததால், மேற்படி சபாவின் போஷகர் ஸ்தானத்திலிருந்து, ஷை தீர்த்தகிரிமுதலியாரை நீக்கி விட்டார். அன்னார்மீது சாட்டப்பட்ட பல குற்றச் சாட்டுகளிலே முக்கியமானது, அவர் ஒருபிராமணவிதந்துவிடம் முறை தவறி நடந்துகொண்டிருக்கிறார் என்பதாகும்''

"யாருக்குமாமா அனுப்ப, தெளிவாகச் சொல்லி விடும்'' என்று பயந்து கேட்டான் மண்டு. "இது ஒரு பத்துகாபிஎடுத்து, மித்திரன், இந்து, விகடன், மணி, போன்ற சகல பத்திரிகைகளுக்கும் அனுப்பிவிடு,'' என்று உத்தரவிட்டார். மண்டு, அதை நிறைவேற்றினான். பிறகு, மீண்டும் பயந்தகுரலில் ராகவாச் சாரியாரை, "மாமா! கோவிக்காமே, இதை மட்டும் சொல்லி விடும். அந்தப் பிராமண விதந்துயார்?'' என்று கேட்டான். "நம்ம கமலிதான்'' என்றார் ராகவாச்சாரியார். கமலி, அவருடைய சகதர்மிணிக்கு ஒன்று விட்ட தங்கை.

—●—

### தஞ்சையில் புதிய நாடகக்கம்பெனி

நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணன்நாடகசபாவின் ஆரம்ப வைபவ நாடகம் "மனோஹரா'' நேற்று இரவு தஞ்சை இராமநாதன்செட்டியார் ஹாலில் ஆரம்பமாயிற்று. அநேகர் இடமின்றித் திரும்பினர். நாடக ஆரம்ப முதல் முடிவுவரை வசீகரமாகவும், விறுவிறுப்பாகவும் காணப்பட்டது.

நாடகத்தின்இடையே சென்னைநாடகமணி எம் என். எம். பாவலர் அவர்கள் கே. ஆர். இராமசாமி அவர்களின் நடிப்புத்திறமையைப் பாராட்டி சமீபத்தில் நடைபெற்ற தமிழ் நாடு நாடக மாநாட்டில் கே. ஆர். இராமசாமி அவர்கட்கு அளித்த "நடிப்புப்புலவர்''என்றசிறப்புப் பட்டத்தை அளித்து மாலை சூட்டினார். மார்ச்சு முதல்வாரத்தில் கிருஷ்ணன்—பாகவர் விடுதலை வாரமாகக் கொண்டாட வேண்டுமென்றும் சர்க்கார் விடுதலை செய்ய வேண்டுமென்ற தீர்மானமொன்றைப்பிரேரேபித்தார். சபையினர் அதனை ஏகோபித்து நிறைவேற்றினர். பின்னர் கிருஷ்ணன் நாடகசபாவைப் பாராட்டி வெற்றிக் கோப்பைகள் பரிசளித்தனர். தோழர் திருவேங்கடஞ்செட்டியார் எல்லோருக்கும் வந்தனங்கூறியதுடன் சென்னையிலிருந்து ஆரம்ப நாடகத்திற்காக வந்து சிறப்புப்பட்டத்தைஅளித்தநாடக மணிக்கும் நன்றி கூறினர்.

—

### நீத்தார் நினைவு

காஞ்சிபுரம் தோழர் அ. க. தங்கவேலர் அவர்களின் அன்னையார் இயற்கை எய்தியதை முன்னிட்டு 17—2—46-ல் நினைவுநாள் நிகழ்ச்சி தோழர் T. சண்முகம் அவர்கள் தலைமையில், தோழர்கள் மாசிலாமணியார், ஈழத்தடிகள், அண்ணாத்துரை, ஆகியவர்களின் சொற்பொழிவுடன்நடைபெற்றது. ஏழைகளுக்குஉணவும் துணியும் அளிக்கப்பட்டத.

—

### வடக்கநந்தல்

வாலிபர் கழகசார்பில் 13—1—46 ஞாயிறு மாலை எஸ். பூவராகன் பி. எ., அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

## விதைக்காது

7-ம் பக்கத் தொடர்ச்சி

உயிரை விட்டவர் பல்லாயிரவர். மராட்டியம் மனைதோறும்ஓர்மாவீரனைத் தந்தது. அப்படிப் பட்ட சிவாஜி, அழைக்கிறார், கங்குபட்டரை, "தரிசனம் தருக! யோசனை அருளுக!'' என்று, அவருடைய வேண்டுகோளைத்தாங்கிக்கொண்டு வீரர் இருவர் வந்துள்ளனர், வீழ்ந்து வணங்குகின்றனர், வெற்றிக் களை முகத்தில்வீச. அது சமயம் கங்குபட்டர், தமது சீடர்களைப் பார்த்திருக்க மாட்டாரா? அந்தப் பார்வையின் பொருள் என்ன? "எதற்கடா, மண்டுகளே! நமக்கு அரசு? அரசாள்பவன் நமது அடிபணியச் சித்தமாக இருக்கும் போது, நாம் ஏன் அரசு அமைக்க வேண்டும்'' என்பதுதானே?

★

"என்னடா இது, தவளை மாதிரி கத்திண்டிருக்கே?''

"யஜுர்!''

"எந்தச் சனியனாவது இருக்கட்டும்.! மனதிற்குள்ளே சொல்லிக் கொள்ளேன். மகா பெரிய ஞானஸ்தனாகப் போகிறாயோ? அப்படித்தான் பிரகஸ்பதி ஆகிவிடுவதாகவே வைத்துக்கொள், என்ன பலனைக் காணப்போகிறாய்? ஆஹா, ஊ ஹீன்னு கூவினதுதான் மிச்சம். வா! கொஞ்ச நேரம், கங்கைக்கரையிலே போய் விச்ராந்தியா உலாவிண்டிருப்போம்.''

"சரி! வா, போவோம். நேக்கும் கொஞ்சம் தலையை வலிக்கிறது.''

இது போல், சீடர்கள் பேசி இருப்பர், கங்கைக்கரையிலே உலவும் போது உலக விவகாரங்கள், ஊர்வளம், பல் வேறு நாட்டு நடவடிக்கைகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு, அரண்மனைகள் அங்கு வாழ்வுருசி இருப்பது முதலியன பற்றிய நினைப்பு வரத்தானே செய்யும்.

"சாமான்யா ளெல்லாம் எவ்வளவு சம்பத்துகளுடன் வாழ்கிறா! அவாளுக்குச் சாமமும் தெரியாது. அவாளெல்லாம் அரண்மனைகளிலே வாசம் செய்யறா. நந்தவனங்களிலே, உலாவிண்டு, அப்சரசு போன்ற ஸ்திரிரத்னங்களோடு சரசமாடிண்டு, சௌக்யமா, உல்லாசமா, காலங்கழிக்கிறா'' என்று கூறிப் பெருமூச்சு விடுவார் ஒரு சீடர், "ஆம்! அதனாலென்னடா? அதற்குத்தான் ராஜ போகம்னு பேர்!'' என்று மற்றவன் பதில்கூறுவான். சஞ்சலப்படும் ரங்குவை, கங்குபட்டரிடமே இழுத்து விட்டுவிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம், உரையாடல் எப்படி இருக்கும்! கங்குபட்டர், தன் சீடன், அசடனாக இருப்பதைக்கண்டு, பரிதாபப்பட்டு அவனுக்கு விளக்கம் பிறக்க உபதேசிப்பார்.

கங்கு: டே, ரங்கு! என்னடா இது, அரண்மனையிலேவாழ்கிறாளே, அப்சரசுகளோடு உலாவுகிறாளே, என்று ஏதேதோ பேசிண்டுஇருந்தயாமே.

ரங்கு: இல்லை, ஸ்வாமி! ராஜாதிராஜாக்கள் அனுபவிக்கும் போகமிருக்கே, அதைப்பற்றி அடியேன் ......................

கங்கு: ஆமாம்! ராஜபோகம்னே அதற்குப்பெயர் இருக்கே!

(3-ம் பக்கம் பார்க்க)



கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
எ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.

‘‘அன்னியன் ஒருவன்கூடப் பட்டினியால் சாகவில்லை’’
சர். இராமசாமி.

Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu' Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.